# உதயதாரகை.—MORNING STAR.

*Published on the 2d and 4th Thursday of every Month at one shilling a Quarter payable in advance.*

ட. புத். சஞ்சிகை க.] ௲௮௱௪௰௩ ௵. தை. ௰௨, தேபதி வியாழக்கிழமை, Thursday, January 12, 1843. [Vol. III. No. 1

உதயதாரகை தனக்கதிபதியாகிய மதிநிறை மைனர்க்குத் துதிபொடுவந்தனம்.

சுவிசேஷ வேத போதகர்கள் அனைவர்க்கும் உடபோகமாகவுஞ் செந்தமிழிலக்கண விலக்கியங்களிலே சித்தனைதெளிந்த தெள்ளியோருக்குச் சிறந்தவிநோதமாகவும் திவ்விய வீரமாமுனிவர் செய்தருளிய வேதியரொழுக்கமென்னும் புத்தகத்தை உங்களுதயதாரகையிலே பதிப்பிக்கவேண்டி ௲௮௱௪௰௨ம் ௵ மார்கழி ௴ முதலாந்தேதியிற் பிரசித்தமாகிய உம். புத்தகம்-உகம் சஞ்சிகையிலே முன்னமே நான் தோற்றுவாய்செய்தபடி இத்துடனே அத்தை அனுப்புகிறேன். அந்நூல் மூலத்தின்ன அவ்வீரமாமுனிவருடைய சரித்திரவரலாற்றிலுள் அச்சரித்திரத்தைச் செப்போரினுறொன்றும் அதன்கணுள்ள சங்கதிகள் இன்னபிரகாரமாகச் சம்பாதிக்கப்பட்டனவென்றும் வெளிப்படையாய் யாவருக்கும் விளங்குமென்றறிந்துகொள்க.

மேலும் சிரேஷ்டராகிய அ. முத்துச்சாமிப்பிள்ளையென்னும் உத்தமசாவிசெய்த அச்சரித்திரத்தைச் சார்ந்து சிற்சில முகாந்திரங்களால் அதைச் சுருக்கிக்கொண்டேன். அப்படிச்செய்வது விவேகிகளுக் கொவ்வாமையல்லவே. அன்றியும் பின்வரும் பிரபந்தத்திற் சத்தியவேதமடைக்கிணங்காத சில நூனுதிகங்களைத் தள்ளுதற்கான அவசிய நியாயங்களை அங்கங்கே கண்டுகொள்க. இதுநிற்க என் வேண்டுதலுக்கிணங்க நீங்கள் தந்த பிரத்தியுத்தாரத்துக்காகநான் மிகவுமுபசரித்துக்கொள்ளுகிறேன்.

௲௮௱௪௰௨. ௵. }
மார்கழி ௴. உகாதி }

இப்படிக்கு,
சின்னையர்.

---

## வீரமாமுனிவர் சரித்திரவரலாறு.
### Life of Beschi.

இந்துதேயத்துக்கு வந்திருந்து சமஸ்கிருதமுந் தமிழுஞ் சம்பூரணமாயுணர்ந்து இத்தேயத்துப் பூருவ விருத்தாந்தங்களையும் பற்பல கலைக்கியானங்களையும் ஆராய்ந்தறிந்த வீரமாமுனிவர் லத்தீன்பாஷையில் எழுதிவைத்திருந்த செந்தமிழிலக்கணத்தை இங்கிலீசுப்பாஷாந்திரப்படுத்தி அச்சிற் பதிப்பிக்கும்படி சென்னைச் சங்கத்திற்றந்துமிலவும் இங்கிலாந்து தேயத்துக்குச் சென்றங்கிருந்த பென்யமீன் பாபிங்டன் துரையவர்கள் வீரமாமுனிவருடைய பிரபந்தங்களெல்லாவற்றையுந் தேடி வைத்துக்கொண்டிருந்தவராதலாலும் அவற்றுட் சில பிரபந்தங்களை லண்டன் பட்டினத்திலேதானே அச்சிற் பதிப்பித்து இந்துதேசத்துக்கனுப்பிப் பிரபலம்பண்ண விருப்புற்றிருந்தவராதலாலும் வீரமாமுனிவருடைய சரித்திரமும் விபரமாய்வேண்டுமென்று கேட்டுக்கொண்டதின்மேல், சென்னைக் கல்விச் சங்கத்துத் தலைவரான மாமணிகளுக்குள்ளே விலையேறப் பெற்ற வைரமணியாக இருவகைத் தமிழினையும் உணர்ந்து இலக்கணவிலக்கியங்களையுந் தெளிந்து கல்வியமிர்தூட்டிக் கருணைமுகங்காட்டி அச்சங்கத்தைக் கனிவாக வளர்த்துவந்த றிச்சாட்டு கிளாக்குத் துரை அவர்களுடைய உத்தரவின்படியே வீரமாமுனிவருடைய சரித்திரமெழுதப்பட்டது. முன்னே அருந்தமிழ்க் கலைகளை நன்குணர்ந்து அநேக பிரபந்தாசிரியராயிருந்த புதுச்சேரி வித்துவான் சுவாமிநாதபிள்ளை வீரமாமுனிவரது சரித்திரத்தை விருப்புற்றாராய்ந்து ௲௮௱௧௮ம் வருஷத்திலே எழுதிவைத்துக்கொண்டிருந்ததைக்கொண்டும், ஆரியந் தெலுங்கு மலையாண்மை முதலிய இந்துதேயத்துப் பாஷைகளைத் தேர்ந்து அவற்றின் இலக்கணவிலக்கியங்களை நன்குணர்ந்து முன்னமே சென்னைநகரிற் கல்விச்சங்க நாட்டுதற்குவேண்டு முயற்சிசெய்தமைத்து அப்பலகலைச்சங்கத்தைப் பாண்டியனைப் போலப் பாதுகாத்திருந்த பிரான்சிஸ் வைத்து எல்லிஸ் துரை அவர்களுடைய அனுமதிப்படி ௲௮௱௧௯ம் வருடத்தில் வீரமாமுனிவர் வாசம்பண்ணின ஸ்தலங்களுக்கெல்லாஞ் சென்று அவர் செய்த நூல்களைச் சேகரம்பண்ணிக்கொண்டுவரப்போயினபொழுது அங்கங்கே அவருடைய வருத்தமானங்களை அறிந்துங் கேட்டுமிருந்த சிஷ்யர்கள் தங்களினவித் தெரிந்தெழுதிவைத்திருந்த குறிப்புகளைக்கொண்டும், வீரமாமுனிவர் தமிழினுண்டுபண்ணிய பிரபந்தங்களினுந் தமிழை லத்தீன் முதலிய பாஷைகளில் மொழிபெயர்த்த புத்தகங்களினுங் கண்டிருக்கிற பற்பல சங்கதிகளைக்கொண்டும் நிச்சயித்து, ௲௮௱௨௰௨ம் வருடத்திலே சென்னைக் கல்விச் சங்கத்தலைமைப்புலமை உத்தியோகத்தர்களில் ஒருவராகிய அ. முத்துச்சாமிப்பிள்ளையால் எழுதப்பட்ட சரித்திரத்தைப் பார்த்துப் பின்வருஞ் சரித்திரச் சுருக்கம எழுதப்பட்டது.

## வீரமாமுனிவர் சரித்திரம்.
### இந்து தேயத்திற் கிறிஸ்துமார்க்கவாரம்பம்.
### Introduction of Christianity into India.

உலகமெங்கும்போய்ச் சிருட்டிக்கப்பட்ட யாவருக்குஞ் சுவிசேஷத்தைப் பிரசித்தம்பண்ணுங்களென்று சருவலோகரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துநாதர் விதித்தருளியபடி அவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர் முதலானவர்களால் வேதவிசுவாச வித்தானது ஐரோப்ப முதலிய பச்சிம கண்டங்களில் முளைத்து விருட்சமாய் வளர்ந்து விருத்தியடைந்ததென்று நாம் கிரகித்துக்கொண்டிருக்கிறோமே அல்லாமலும் அப்பன்னிரண்டப்போஸ்தருளொருவராகிய தோமாசென்பவர் சீரியா, பார்சி என்னுந்தேயங்களின் வழியாய் வந்து இந்து தேயத்திற் சுவிசேஷத்தைப் பிரபலியம்பண்ணி அநேகர்களைத் தமக்குச் சீஷர்களாக்கிக்கொண்டாரென்றும் பாரம்பரியமாய் அறிந்திருக்கிறோம். அன்றியும் சிரிய தேயத்தைச் சேர்ந்த தர்க்கிஸ்தானிலே தோமாசென்பவர் ஸ்தாபித்த சபையார் சத்துவகுணமுடையவர்களாயும், பரோபகாரிகளாயும் இருந்ததினால் தாம் பெற்ற சுவிசேஷ ஒளி தமக்குமாத்திரமல்ல, எவர்களுக்கும் பிரகாசிக்கத்தக்க ஒரு திவ்விய வரப்பிரசாதமாயிருக்கிறதென்றுணர்ந்து இருளிலும மரண நிழலிலுமிருக்குந் தூரதேயத்தாருக்கும் அவ்வொளியைப் பிரகாசிப்பிக்கும்பொருட்டுக் குருமாரைத்தெரிந்தேற்படுத்தி இந்தியா சீனா முதலிய தேயங்களுக்கு அனுப்பி உத்தமமையாய் ௲ம் ஆண்டுவரைக்குங் கிறிஸ்து மார்க்கத்தை ஸ்தாபிக்கப் பிரயத்தனம்பண்ணி வந்தார்களென்று சபைச் சரித்திரத்தினால் நன்குணர்ந்திருக்கிறோம்.

## இந்து தேயத்திற் பாப்புமதப் பிரவேசம்.
### Rise of Popery in India.

போர்த்துக்கேசக்காரர் ஏறக்குறைய ௲௫௱ம் ஆண்டளவில் இந்துதேயத்திலே இராச்சியபரிபாலனஞ் செய்யத்தொடங்கிய பின் பாப்புமத சபையாரால் அனுப்பப்பட்ட சவரிமுதலானவர்கள் வந்து பாப்புமதத்தை இந்தியா முதலிய தேயங்களிற் பிரசித்தப்படுத்தினார்கள். இவர்களுக்குள் தத்துவபோதக சுவாமி என்பவர் மகா நிபுணராய்ச் சமஸ்கிருதமுந் தமிழும் சம்பூரணமாய்க் கற்றுணர்ந்து இந்துமதத்தார் அநுசரிக்கிற பற்பல கலைக்கியானங்களையும் ஆகம புராணங்களையும் ஆராய்ந்தறிந்து பாப்புமதம் எங்கெங்கும் பரம்பி வளருதற்கான எத்தனங்களைப் பண்ணி வந்தார். இவரும் இவரோடொத்த வேறு சிலரும் உரோமைப் பிராமணரென்று பேர்பெற்றிருந்தார்கள். பிரமமென்கிற பதத்துக்கு எங்குமிருக்கிறவரென்று பொருளல்லாமலும் வேதமெனவுமருத்தமிருக்கின்றமையால் பிராமணரென்பதற்கு வேதமுணர்ந்தவரென்று பயனும். ஆகையினாலே உரோமைப் பிராமணரென்றபொழுது உரோமையிலிருந்துவந்த வேதியரென்று பயனும். இப்படி வேதமுணர்ந்தவரை வேதியரென்பதுபோலப் பிரமமெனினும் வேதமுணர்ந்தோதுவார் எத்தேசத்தாராயினும அவரை வேதியரென்றும் பிராமணரெனவுஞ் சொல்லலாம். தத்துவபோதக சுவாமி இப்படியைக் கருதினவராதலால் தாமுண்டுபண்ணின வேத விவரண பிரபந்தங்களில் வேத சாஸ்திரிகளைப் பிரமவாதிகளென்றும் யூதர்களுடைய குருக்களாகிய ஆரூசன், கைபபாசன் என்பவர்களை யூதப் பிராமணகளென்றும், அநேகம் இடங்களிற் பிரயோகம்பண்ணியிருக்கிறார். இந்துக்கள் இக்கருத்தை அங்கீகரியாமற் பிராமணரென்னும் பதத்துக்குப் பிரமத்தவனுடைய வமிசத்தாரென்று பயன்படுத்துவார்கள். இப்படி அ

Digitized by Google

க்காலத்திற்றத்துவபோதக சுவாமி முதலானவர்களுக்கும் பிராமணர்களுக்கும் விவாதமுண்டாயிருந்ததுமன்றி இக்காலத்திலும் இவ்வூரிலுள்ள வித்துவான்களுங் குறித்த பயனுக்குடன்படலாகாதெனச் சொல்வதற்கு இடமுண்டு.

### வீரமாமுனிவரினது தோற்றம்.

### The arrival of Beschi in India.

தத்துவபோதகர் முதலியவர்களுடைய பிரயத்தனத்தினாற் பாப்பு மதந் தழைத்துப் பரம்பி நிலைபெற்றதின்பின் கனம்பொருந்திய பாப்பானவர் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள இத்தாலியதேசத்திற் பிறந்து வளர்ந்து உரோமபுரி மடத்தில் வேதசாஸ்திர முதலியவற்றை நன்றாய்க் கற்றுணர்ந்த வீரமாமுனிவரென்றும் கம்பூரியையரென்றுஞ் சொல்லப்பட்ட இருவரைத் தெரிந்து இந்து தேசத்தில் நாட்டப்பட்ட சபையைப் பிரதிபாலனம்பண்ணி நடப்பிக்கும்பொருட்டு ௲௭௱ம் ஆண்டில் அனுப்பினர். கம்பூரியையரென்பவர் சேரனாடாகிய மலையாளத்துக்குச் சென்று மலையாண்மையிலும் ஆரியத்திலும் பாண்டித்தியமுள்ளவராய் அங்கங்குள்ள சனங்களுக்கு அறிவு கொளுத்தும்பொருட்டு அநேக பிரபந்தங்களை எழுதி இத்தன்மையாய்த் தன் றொழிலை நடப்பித்துக்கொண்டிருந்தார்.

வீரமாமுனிவரோ தமிழ் நாட்டிற் சென்று சரித்திர வரலாற்றிற் கூறியபடி சமஸ்கிருதமுந் தமிழும் பூரணமாய் உணர்ந்து இத்தேசத்துப் பூருவவிருத்தாந்தங்களையும் பற்பல கலைக்கியானங்களையும் ஆராய்ந்தறிந்து அநேக வேதவிவரண பிரபந்தங்களையுஞ் செய்து தமக்கமைந்த சபையாருக்கு முயற்சியுடன் போதித்துக்கொண்டு அங்கே வாசஞ் செய்தார். அவரிடத்தில் எப்பொழுதும் ஐந்து கற்றுச்சொல்லிகள் இருப்பார்கள். அவர்களில் நால்வர் அவர்பாடும் பாட்டில் நாலடியை நாலேட்டிலெழுத மற்றவன் அவற்றைச் சேர்த்துப் புத்தகத்தில் எழுதுவான். ஏனெனில் அவர் பாடுகிற விரைவுக்குத்தக்கதாக ஒருவன் எழுதக் கூடாததினாற் சொன்ன ஓரடியைக் கேட்ட ஒருவன் எழுதமுன்னம் அவருக்குத்தோன்றும் இரண்டாமடியை மற்றொருவனுக்கும் மூன்றும் நான்காமடிகளையும் அவ்வண்ணமே வெவ்வேறு பேர்களுக்குஞ் சொல்லி எழுதிவிப்பார்.

இவர் சிந்து தேயத்திலிருக்கையில் அத்தேசாசாரத்துக்கிணங்க நடந்து வந்தால் தாம் செய்யும் முயற்சி அநுகூலமாகுமென்று கருதி மாமிசபடசணத்தை விட்டுப் பாகம்பண்ணுவதற்குத் தவசிப்பிள்ளைகளையும் வைத்து ஒருபொழுது மாத்திரம் போசனம்பண்ணித் தமிழ்த்தேசாசார வஸ்திராபரணங்களைத் தரித்துக்கொண்டிருப்பார். அன்றியும் இவர் மடத்திற்றங்கும்பொழுது நெற்றியிலே சந்தனமிட்டுக்கொண்டு அரைக்கு நீர்க்காவிச் சோமனும திருநெல்வேலிக் கம்பிச் சோமம் போர்வையுமிட்டுக்கொண்டு காலிற் பாதகுறடும்போட்டுக்கொண்டிருப்பார். இவர்வெளியிலே சாரிபோகும்பொழுது, பூங்காவியங்கியும் காவிநிறக்கட்டும் வெள்ளைத்தலைப்பாகையும் இளஞ்சரவியுத்தரீகமுக்காடுங் கையிற் காவி உறுமாலும் காதில் முத்துக் கடுக்கனும் கெம்பொட்டுக் கடுக்கனும் விரலிலே தம்பாக்கு மோதிரமும் கையிலே தண்டும் காலிற் சோடுமணிந்து பல்லக்கின் மெத்தைமேலிட்டிருக்கும் புலித்தோலாசனத்தின்மேல் இருந்து வெண்சாமரை வீசவும் இரண்டு மயிற்றோகைக்கோவிரட்டவும் தங்கக்கலசம் வைத்த காவிப் பட்டுக்குடை பிடிக்கவும் சாரிபோவார். இவரிறங்குமிடங்களிலும் புலித்தோலாசனத்தின் மேல் உட்கார்வார்.

இதுவுமல்லாமல ஏழைப் பரதேசிகளுக்கு மிகுந்த உபகாரங்களுந் தானதருமங்களுஞ் செய்துகொண்டும் அந்தந்தக் கோவிற்றிருப்பணிகளுக்கு வேண்டிய உபகாரங்களும் பண்ணிக்கொண்டும் அநேக பிள்ளைகளுக்குப் பாஷைகளைப் படிப்பித்தும் யோக்கியர்களுக்குத் தகுமான உத்தியோகங் கொடுப்பித்துக்கொண்டுமிருப்பார். இப்படி இருக்கையில் வீரமாமுனிவர் முத்துச்சாமிக்கச்சிராயப்பாளையகாரனுடைய பருவூருக்குச் சேர்ந்த கோனான்குப்பமென்ற ஆரியனூரில் ஒரு கோவில கட்டுவித்துப் பின்பு மயிலாப்பூருக்கு வந்து மேத்திராணியாரையுங் கண்டு பேசி வஸ்திராபரணமெல்லாந் தமிழ்ஸ்திரீரூபமாக ஒரு மாதாப் படமெழுதி அதை மனிலாவுக்கனுப்பி ஒரு ஸ்திரீயினுன்னதத்திற்கு மாதாசுரூபமும், கையில ஒரு வருஷத்துப் பிள்ளைப்பிரமாணம் யேசுநாதர் சுரூபமுஞ் செய்வித்து அத்தை மயிலாப்பூருக்கழைப்பித்து அதற்குப் பெரிய நாயகியம்மனெனப் பெயரிட்டு அதை ஊருக்குக் கொண்டுபோய்த் திருவிழாச் செய்து அந்த உற்சவத்திற் பதினெட்டு பாடல்பாடிப் படிக்கச்சொல்லி அந்த மாதாவின் சுரூபத்தை அக்கோவிலிலே ஸ்தாபித்தார். மேலும் ஆரியனூர் அரசிலையிட்டரங்கப்பமழவராயன் முன்னாலே துகாநிவம் வருடத்தில் ஏலாக்குறிச்சி திருக்காவலூரில் சருவேசுரன் கோவிலுக்குச் சிலர் சாதனம்பண்ணிக்கொடுத்திருந்த நிலத்திற் பிற்பாடு வீரமாமுனிவரானவர் அடைக்கலமாயி திருநாமத்தாலோர்கோவில்கட்டுவித்தார்.

திருச்சிராப்பள்ளிக்கு நபாபுவாயிருந்த சந்தாசாய்பு வீரமாமுனிவர் மகா புத்திமானென்று நிச்சயித்து இவர் மேல் அதிக பிரீதியாகி இவருக்கு இஸ்மத் சந்நியாசி என்று பெயரிட்டார். இஸ்மித்தென்பது அரபிப் பாஷையிலே குற்றங்களைக் கடிந்திருக்கிற பழுதற்றவரென்று பயன்கொள்ளும். மேலும் சொன்னவிடத்துக்கு வடக்குத் திருச்சிராப்பள்ளிச் சீமையைச் சேர்ந்த உக்களூர், மாலவர், அர்ரூர், நல்லூர் என்னும் நான்கு கிராமங்களுண்டு. இவை வருடத்துக்குப் பன்னீராயிரம் ரூபாய் எடுக்கும். இந்த நான்கு கிராமங்களையும் அவருடைய செலவுக்குச் சருவமானியமாகக் கொடுத்து அவரைத் தன்னிடத்திலே திவானாக வைத்துக்கொண்டான். இவர் திவான் உத்தியோகத்திலிருக்கையில் வெளியிலே சாரிபுறப்பட்டால் இத்தேயத்துப் பிரதான இந்துக் குருக்களுக்கு நடந்துவருகிற சிறப்புப்போல இந்துக் கிறிஸ்தவர்களுடைய குருவாகிய வீரமாமுனிவருக்கு முன்னிருந்த சிறப்புக்களோடு நாலு வெள்ளித்தடிக்காரரும், முப்பது குதிரை மேற் சேவகரும், குதிரைமேல்டங்காவும் நாகசுரமும் இவரேறுகிற ஒரு வெள்ளைக் குதிரையும், ஒரு கறுப்புக் குதிரையும் நானாவிதமான சிங்காரத்துடன் முன்னே நடக்கப், பின்னேயொட்டகத்தின் மேல் நகராவும் ஓர் ஒட்டகத்தின் மேல் கைத்தாளமு முழங்கிவர மற்றோரொட்டகத்தின்மேல பூசை பண்ணுதற்கு வேண்டிய வஸ்திரபாத்திரமுதலிய வஸ்துக்களும் மூன்றெட்டையின் மேல் கூடாரங்களும் மற்றச் சாமான்களும் வரும்படி சாரிபோவார். இவரிறங்குமிடங்களிலும், நபாபுகச்சேரியிலும் புலித்தோலாசனத்தின் மேல் உட்காருவார்.

(To be Continued.)

### மகம்மது மதாநுசாரிகளின்

## கோறுனாகமம்.

### (Remarks introductory to selections from the Koran.)

மகம்மது மதஸ்தரின் ஆகமமென்று சொல்லப்படுவதாகிய கோறுன் அநாதிக்குஅரபிப் பாஷையிலெழுதப்பட்டது. இப்படிப்பட்ட தெய்வீக புத்தகத்தை மறுபாஷையாகத் திருப்பியெழுதத் துணிவது நெறிகேடென்றும், அப்படியெழுதத் துணிந்தாலும் அது அவர்களுக்கநுகூலசித்தியாகாதென்றும வியாபகமாய் எங்கும் எண்ணங்கொண்டிருக்கிறபடியால் கோறுனை வாசிக்க விரும்புகிறோர் அரபிப் பாஷையைப் படிக்கவேண்டியது. அரபிப்பாஷையை வாசித்து விளங்கக் கூடியவர்களார் இந்த இலங்கைத் தீவிலுண்டு? ஏராளமாயிருக்கப்பட்ட மகம்மதுஸ்தர்களுக்குள்ளே இந்த ஆகமம் மறைக்கப்பட்டிருக்கிறபடியால் அவர்களும் அத்தை விளங்கிக்கொள்ள அவிவேகிகளாயிருக்கிறார்கள். கோறுனாகமம் அவர்களுடைய பாஷையிற்றிருப்பியெழுதப்படவுமில்லை. அவர்கள் அத்தைக் கற்கிறதற்கும் வேண்டிய வழிவகை எதுக்களைப் பண்ணிக்கொள்ளுகிறதுமில்லை. இதுகாரியத்தில் மகம்மதுஸ்தருடைய நிலையானது இந்துக்களுடைய நிலைமையைப்போலப் பரிதபிக்கப்படத்தக்கதாயிருக்கின்றது. இந்துக்கள் தங்களிடத்தில் நாலுவேதமுண்டென்று பகடம்பண்ணிப் பெருமைபாராட்டிக்கொள்ளுகிறார்கள். அப்படியிருந்தும் இந்த நாலு வேதமும் சமஸ்கிருதபாஷையில் மறைவாய் வரையப்பட்டிருக்கிறபடியாற் சனங்கள் தங்களுடைய குருக்கள்மாராலும் மற்றும்வழிகாட்டிகளாலும் அனுப்பப்பட்டு மோசத்துறையில்இறங்கிவிடவில்லையென்பதற்கத்தாட்சியாக அவர்கள் எவ்வித நம்பிக்கையைக்கொண்டிருக்கிறார்கள். ஆண்டவன் கொடுத்த நியாயப்பிரமாணத்தைக் கற்றுக்கொள்ளும்படி மோசேயென்பவர் இஸ்ரவேற்சனங்களுக்குக் கட்டளையிட்டார். அப்படியே பெரிய நபியாகிய கிறிஸ்துநாதரும் "வேதவாக்கியங்களிலுலே நித்திய சீவன் உங்களுக்குண்டாகுமென்று எண்ணுகிறபடியால் நீங்கள் அவைகளை ஆராய்ந்துபாருங்கள், அவைகளுமே என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கின்றன," என்று சொன்னார். இவ்வூரிலுள்ள மகம்மதுஸ்தர் தாங்கள் வாசிக்கக்கூடிய பாஷையிற் கோறுனாகமமெழுதப்படாமலி

Digitized by Google

ருப்பதைக் காண்கும்பொழுது பின்னை அவர்கள் எப்படி அதைத் தேடி ஆராய்ந்து படித்தறியக் கூடியவராயிருக்கும். தாங்கள் நிற்குஞ் சமயநிலையும் முறையுங் கோறுஆகமத்துக்கொத்துவருகுதோ அல்லவோவென்றவர்கள் அறிந்துகொள்ளக்கூடிய வழியெப்படி? இந்துக்களுந் தங்களுடைய சாத்திரத்தின் சூத்திரத்தையறியாமல் திமிரப்படலத்தில் அடைப்பட்டிருக்கிறது போல மகம்மதுமதஸ்தர்களும் அப்படியே அவர்களைப்போல அனுப்பப்பட்டு மோசத்துறைக்குப்போகவில்லையென்றவர்கள் வெளிதமாய்ச் ருபிக்கக் கூடியதாயிருக்கும்.

மகம்மதுமதாநுசாரிகள் பூசித்துவரும் மதத்தின் ஆதிதோற்றத்தையும் அதின்பிரவேசத்தையுங் குறித்து மகம்மதுமதஸ்தர் ஆராய்ச்சிசெய்வார்களென்றெண்ணி அவர்கள் நபியின் சரித்திரந் தொடுத்த மேலான விஷயங்களைத் தாரகையிற் பிரசுரஞ்செய்திருக்கிறோம். ஆகையால் தாரகைப் பிரதிகளை வைத்திருப்பவர்கள் அத்தைக் கவனமாகவுங் காதலாகவும் வாசித்து யோசிக்கும்படி நாமனைவரையும் விரும்புகிறோம். அப்படி முன்னும் பிரசுரஞ்செய்திருந்தாலும் இன்னும் அம்மதஸ்தர்களுக்குச் சகாயஞ்செய்யும் பொருட்டுக் கோறுஆகமத்திலிருந்து சில மேலான பங்கைப் பெயர்த்தெழுதித் தாரகையிற் பதிக்கும்படி எண்ணியிருக்கிறோம். இப்படிப்பட்ட புத்தகமுழுவதையும் தமிழ்ப் பாஷையாக மொழிபெயர்த்துப் பிரசுரஞ்செய்து வாசிக்கப் பழகியிருக்கிற ஒவ்வொருவரிடத்திலும் அப்படிப்பட்ட பிரதிகளைக்கொடுத்து அத்தை வாசிப்பதினால் வரும் பலாபலன்களை அறியும்பொருட்டுத் தங்கள் கவனம் முழுவதையும் இதிற் செலுத்தவேதுவாயுமிருக்கும். யாதாமொரு புத்தகத்தினுண்மையை மேற்கொண்டு அதாவது அத்தை அங்கீகாரம்பண்ணிக்கொண்டு அத்தைச் சாவதானமாய் வாசிப்பது நல்ல தகுதியையுடைத்தாயிருந்தபோதல் சத்தியமாகவே அது சருவ வல்லமையுடைய ஞானவிபிரம்வசத்தினுற் கொடுக்கப்பட்டு நாங்கள் என்ன நோக்கத்தினால் இவ்வுலகத்திற் படைக்கப்பட்டோமென்பதையும் எங்களுக்கு வெளிப்படுத்துகின்றது.

நாங்கள் முதலாவதாகக் கோறுஆகமத்துக்கும் கிறிஸ்துமதஸ்தன் அநுசரணைபண்ணி வரும் வேதாகமத்துக்குமுள்ள ஒற்றுமைப்பாடான காரியங்களையும், இரண்டாவது ஒற்றுமைப்பாடில்லாத காரியங்களையும். மூன்றாவது பல திரட்டான காரியங்களையும் பிரசுரஞ்செய்வதுமன்றி அதைப்பற்றிச் சில பல குறிப்புகளையும் பற்றிய பிரசித்தம்பண்ணுவோம். அப்படிப்பண்ணும்பொழுதில் அத்தை வாசிப்பவர்கள் அவ்விரண்டுக்குமுள்ள வித்தியாசத்தைத் தெளிவுறவறிந்துகொள்ளும் பொருட்டுக் கோறுஆகமத்திலிருந்து பேர்த்தெழுதிய முகவுரை வாக்கியங்களைப் பெரிதான எழுத்திலும் நாங்கள் அதைப்பற்றிப்பண்ணும் வியாக்கியானங்களைச் சிறிதான எழுத்திலும் பிரசுரஞ்செய்வோம்.

இப்பொழுது நாங்கள் மூலமாகக்கொண்டெழுதும் கோறுஆகமத்தை இன்றைக்கு நூறு வருடத்துக்கு முன்னிருந்தவரும், இலக்கணவிலக்கிய ஆயாசகிபோருமாயிருந்த சார்ச்சு சேல் என்ற இங்கிலிஷ் துரைமகன் (Geo. Sale, Esq.) இங்கிலிஷ் மொழிபெயர்த்தார். இவர் அரபிப் பாஷையை அதிநுட்பமாய்க் கற்றுக்கொண்டதுமன்றி அரபிவருணத்தவர்களைக் குறித்தவருத்தமானத்தையும் அவர்கள் நடை உடை பாவனையையும் மெத்த ஆழமாய் ஆராய்ந்து பார்த்தார். இத்தை வாசிக்கிறவர்களாரெனகிலும் அரபிப்பாஷையையறிந்திருந்தால் எங்களுடைய மொழிபெயர்ப்புத் தங்களுடைய மூலப்பிரதியுமொன்றாக்கொன்று பேதப்படுகுதோவென்று திட்டமாய்ச் சமானித்துப் பார்க்கட்டும். கோறுஆகமத்திலே (௱௰௪) அதிகாரங்களுண்டு. அதின் முதலாம அதிகாரம் பாயிரத்தைப் பற்றிச் சொல்லுகின்றதுமன்றி மிகுந்த குறைந்ததுமாயிருக்கின்றது. ஆகையால அதுதானே நாங்கள் பெயர்த்தெழுதுந் தொடர்புக்குத் தகுதியான பாயிரமாயிருக்கும்.

## மகம்மது சமய நூல்—AL-KORAN.

### ௧. அதிகாரம்.

### பாயிரம்.—Preface.

அநுக்கிரகத்தை அளிக்கும் ஆண்டவனின் நாமத்தைத்தொட்டு—சராசரமனைத்துக்கும் ஆண்டவனுமாகிய கத்தாவுக்கே துதியுண்டாவதாக—நியாயத்தீர்ப்புநாளுக்கதிபதியாயிருக்கிற இராசா அநுக்கிரகமுள்ளவராயிருக்கிறார்—உம்மை மதித்துத் துதிக்கிறோம். உமது மூலமாய் நாம் ஒத்தாசையைத் தேடியடைகிறோம்—செம்மையான பாதையிலே எம்மை நடத்தும். நீர் அநுக்கிரகஞ்செய்விக்கிறீரோ அவர்கள் வழியிலெம்மையுங் கொண்டுவாரும். நீர் முனிவுகொண்டிருக்கிறவர்களுடைய அல்லது உம்மை விட்டு வழிவிலகிப்போனவர்களுடைய வழியிலெம்மைக்கொண்டுபோகாதையும்.

---

## ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.

CHAP. VI.] *Sympathy and Fascination.* [PART II.

We have now considered the most important appearances both of organized and unorganized nature, and have traced out something of the laws by which these appearances are produced and regulated. Many of these facts are curious, and some appear truly wonderful, and their causes are "past finding out."

2. We find different bodies operating on each other, when, so far as we are able to trace them, they have no medium of communication. The sun is perpetually acting upon and influencing the earth; the earth influences the moon; the moon, the ocean; the magnet operates upon iron, whatever be the substance between them.

3. We find, too, by the aid of chemistry, that almost every substance has some peculiar inclination or affinity for some kind of material, and a dislike or repulsion towards some other kind, even before they are brought into contact. Thus lime attracts carbonic acid, drawing it from the atmosphere, and hence purifying the air. But lime has a stronger affinity still for sulphuric acid.

4. The same sympathy is found among vegetables, the male and female plants attracting each other; and hence it has been pretended there was the preference of love between them; but it has been shown plants have no nerves, and cannot have feeling; therefore the story of their loves is an idle dream; it is the sympathy of attraction, modified by the instinct of the plant, and hence appearing more like animal love than the attraction between substances of mere matter, such as that between drops of quick-silver, or between sugar and water.

5. When we come to the animal system, we find the same curious sympathy between different parts of the body; for instance, a small wound on one of the fingers will produce the disease of the locked jaw; and a disease of the liver causes a severe pain in the left shoulder. We do not know any reason why the finger and the jaw, or the liver and the shoulder should thus sympathize.

(To be continued.)

---

[Translation of the foregoing.]

### கூட்டேன்பவர்செய்த பிரபஞ்சநூல்.

### ௬. அதிகாரம்.—௨ம். பிரிவு.

### உபவுணர்ச்சி—மருட்டியல்.

௧. சீவாங்கப் பொருளினுலும், சீவாங்கமற்ற பொருளினுலுமுண்டாய பிரதான தோற்றத்தையும் அத்தோற்றமுண்டாகிக் கிரமப்படுவதற்குக் காரணமாயிருந்த பிரமாணத்தையும் பார்த்தோம். இவ்வகையான உதாரணங்களில் அநேக நூதனமுள்ளதாயிருக்கின்றதுமன்றிச் சிலவற்றைப் பார்த்தால் மெத்த அதிசயங்கொள்ளப்படத்தக்கதாயிருக்கின்றன அப்படியிருந்தும் அவைகள் உண்டான காரணமின்னதென நமக்குத் தெரியாது.

௨. ஒன்றையொன்று வலித்திழுக்கிற வித்தியாசமான பொருள்களைக் காண்கிறோம். அவைகளைப் பற்றி நாமறியக்கூடியளவுக்கும் அவைகள் ஒன்றோடொன்றேற்பட்டதப்படுவதற்கேதுவில்லாத

Digitized by Google

ருக்கின்றன. உதாரணமாக, சூரியன் எப்பொழுதும் பூமியையும், பூமி சந்திரனையும், சந்திரன் சமுத்திரத்தையும் காந்தத்துக்கும் இரும்புக்குமிடையே எவ்வித பதார்த்தமிருந்தாலும் காந்தம் இரும்பையும வலித்திழுக்கின்றது.

௩. இன்னும் கிட்டத்தட்ட ஒவ்வொரு பதார்த்தமுஞ் சில வேறுவகையான பதார்த்தத்துடனொற்றுமைச் சம்பந்தப்பட்டிருக்குதென்றும், வேறு சில பதார்த்தங்களை ஒன்றுக்கொன்று கிட்டக்கொண்டுவரமுன்னமேதானும் உபேட்சைகொள்ளுகுதென்றும், ரசவாதத்தைக்கொண்டு நாமறிகிறோம். உதாரணமாக, சுண்ணாம்பு பரமாணுவிலிருந்து வந்து அதைச் சுத்தம்பண்ணுகிற நீராவத்தைப்பற்றியிழுக்குது. அப்படியிருந்தும் சுண்ணாம்புக்கும் கந்தகத்திராவகத்துக்கும மெத்தச் சம்பந்தமுண்டு.

௪. இந்த உபவுணர்ச்சிச் சம்பந்தத்தை நாங்கள் பூண்டுவகைகளுக்குள்ளுங் காண்கிறோம். எப்படியெனில், ஆண்பெண்வருக்கத்தைச் சார்ந்த பூண்டுகள் ஒன்றையொன்று பற்றி இழுக்கிறதினாலே இவைகளுக்கு நேசமான வாரப்பாடுண்டென்று சிலர் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அப்படிச்சொல்லியும் பூண்டுகளுக்கு நாட்டமில்லாத காரணத்தைத் தொட்டு அவைகளுக்கு வாரப்பாடான உணர்வு இல்லையெனவுஞ் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆகையால அவைகளொன்றுக்கொன்று நேசமாயிருப்பதெல்லாம் வீண்பட்ட சொப்பனம போலேயிருக்கின்றது. அது பூண்டுவகைக்குரித்தான சுயவுணர்ச்சியினால விகாரப்படுத்தப்பட்ட உபவுணர்ச்சியேயல்லாமல மற்றும்படியல்ல. ஆகையினாலே ஒரு சிறுத்திவலையான இரதம் வேறொரு திவலை இரதத்தோடே போய்ச்சேருவது போலவும், சீனிக்குந் தண்ணீருக்குமுள்ள சம்பந்தம்போலவும இப்படிப்பட்ட பதார்த்தம் ஒன்றுக்கொன்று சம்பந்தமாயிருக்கிறதிலும் அவைகளுக்கு மருகத்தன்மையான நேசமிருக்கிறதாக நம்பவருகின்றது.

௫. யோனிபேதத்தைப் பற்றி நாங்கள் பார்க்கும்போது பற்பல அங்கங்களுக்குமிடையே இப்படிப்பட்ட உபவுணர்ச்சியைக்காண்கிறோம். உதாரணமாக, விரலிலே ஒருபுண்காயமிருந்தால் அதினால அலகுப் பூட்டு வியாதியுண்டாகின்றது, ஈரல் வியாதியினாலே வலதுதோளில மெத்த வருத்தமுண்டாகின்றது. விரலும் அலகும, அல்லது ஈரலும் தோளும இப்படி என்ன நியாயத்தைத் தொட்டு ஒன்றுக்கொன்று உபவுணர்ச்சிகொள்ளுகுதென்பது எங்களுக்குத் தெரியாது. [இன்னும் வரும்.]

---

## ABBOTT'S LESSONS ON MORALS.

[Adapted to Hindu Readers.]

### *Lesson I.*—Conscience.

When we are doing, or have done, what is right, our hearts are peaceful and happy. When we are doing, or have done, what is wrong, we feel guilty, and anxious, and miserable. God has made us so, because he wishes us always to do right, and never to do wrong.

This feeling, which makes us peaceful and happy when we do our duty, and which condemns us when we sin, is *conscience*.

Conscience is very *faithful*; it is always ready in our hearts, to tell us what we ought to do and what we ought not to do. This lesson will explain several ways in which conscience is very faithful to us.

1. Conscience *warns* us, before we begin to do wrong. Do you know what *warning* means? If a man were to see a little girl going towards a deep well, with nothing around it, to keep her from falling in, and should tell her to take care and not to go there,—that would be warning her. Now, conscience warns us. When we are going to do any thing wrong;—yes, even when we are just beginning to think of doing wrong,—conscience warns us not to do it.

One day, Tarmu was playing in the yard, and he found by the side of the fence, a large yellow plantain. He took it up and hid it in his cloth. He knew that it belonged to one of the other boys, but he thought he would carry it away alone, and eat it after school. Just then the master called the boys to go in. Tarmu went in, and sat down, with the plantain in his cloth.

All the remainder of that afternoon, Tarmu was restless and uneasy. There was something in his heart which seemed to say, "Tarmu that plantain is not yours, you must not keep it. You must not eat it after school." This was conscience, warning Tarmu not to do wrong. For Tarmu had not yet actually *done* any thing wrong, he had only *thought* of doing wrong. The plantain was safe in his cloth. He had had no opportunity yet to give it to the boy that it belonged to. He had not yet begun to carry it away to a secret place to eat it. But conscience looked forward to, and *warned* him against, the dishonest act which he was going to do.

Thus conscience often *warns* persons even before they have begun to do the wrong thing which they are thinking of doing. It will not let them enjoy any peace or happiness until they determine that they will not do it. Tarmu felt uneasy and unhappy all the afternoon. He tried to amuse his mind by thinking of something else; but conscience would not let him rest, until, at last, just before school was done, he resolved that he would go and carry the plantain to the boy that it belonged to. Then his mind was relieved, and he gradually became quiet in spirit and happy again.

#### Questions on Lesson I.

Repeat the general principle stated at the beginning of the Lesson.
What does conscience do when we are meditating or intending to do wrong?
What is *warning*?
Do you remember the story of Tarmu and the plantain?
Was the plantain Tarmu's?
If a boy finds any thing which some body else has lost, is it his because he has found it?
What ought Tarmu to have done with the plantain?
What ought a boy or a girl to do whenever they find any thing?
Why was Tarmu unhappy at school that day?

---

## நன்மார்க்க நேறி.

### ௧வது. சீவசாட்சி, அல்லது மனச்சாட்சி.

நிதானமானவற்றை நாங்கள் செய்திருக்கிறபொழுது அல்லது செய்யும்பொழுது எங்கள் இதயம சமாதானமும் பாக்கியமுமுள்ளவைகளாயிருக்கின்றது. நிதானமற்றவைகளை நாங்கள் செய்திருக்கிறபொழுது அல்லது செய்யும்பொழுது நாங்கள் குற்றமுள்ளவர்களென்றுங் கிர்ப்பந்தமுள்ளவர்களென்றுமெண்ணித் தத்தளிக்கிறோம். இப்படியெல்லாம எங்களைத் தத்தளிப்புக்கொள்ளப்பண்ணுகிறவர் தேவனே; ஏனென்றால், நாங்கள் தீமையை விட்டு நன்மையை நடப்பிக்கும்படி அவரெவ்வாதகாலமும் எங்களை விரும்புகிறார். நாங்கள் எமது கடமையைச் சரியாய்ச் செய்யும்பொழுது சமாதானசௌக்கியமுள்ளவர்களாகவும், நாம் பாவஞ் செய்யும்பொழுது நாங்கள் குற்றவாளிகளென்றுணரப்பண்ணும் அந்த உணர்வே சீவசாட்சியென்றழைக்கப்படும்.

சீவசாட்சி எப்பொழுதும் நிதார்த்தமுள்ளதாயிருக்குது. நாங்கள் எதைச் செய்யவேணுமென்றும் எதை செய்யாமல விடவேண்டுமென்றும் எங்கள் இருதயத்திலே வந்து சொல்லுகின்றது. சீவசாட்சி எங்கள் பாட்டுக்கு மெத்த நிதார்த்தமுள்ளதாயிருக்கிறதென்பதைப் பற்றிப் பிள்ளைகளுக்கு அநேக வழியாய் எடுத்துக்காட்டலாம். எப்படியெனில,

௧. சீவசாட்சியானதுநாம் யாதொன்றைச் செய்ய ஆரம்பிக்குமுன்னேஅதுஎங்களை எச்சரிக்குது. எச்சரிப்பென்பதின் கருத்து உங்களுக்கு விளங்குதோ? ஒரு பொடிச்சி விழாதபடிக்குப் பண்ணைத்தக்க யாதொன்றுமில்லாத ஒரு ஆழிய கிணற்றைநோக்கிப்போ

Digitized by Google

றதைக் கண்டு அங்கே போகாதபடி பத்திரம் பார்த்துக்கொள்ளென்று அவனுக்குச் சொல்வதுண்டானால், அப்படிச் சொல்லுவதே அவனுக்கு எச்சரிப்பென்று சொல்லலாம். நிதானமற்ற காரியங்களை நாம் செய்யும்பொழுது அல்லது செய்ய உன்னும்பொழுது தானும் சிவசாட்சி அங்களைச் செய்யாதபடிக்குப் புத்திசொல்லி எச்சரிக்குது.

ஒரு நாள் தாமு என்ற பிள்ளையாண்டான் விளையாடிக்கொண்டிருக்கையில், வேலியோரத்திலே ஒரு பெரிய செவ்வாழைப் பழமிருக்கக்கண்டு, அதைக் குனிந்தெடுத்துத் தனதுபுடைவைக்குள்ளே ஒளித்தும், அதொரு பொடியனுடைய பழமென்றறிந்தாலும் தான் மாத்திரமே அதைக் கொண்டுபோய்ப் பள்ளிக்கூடமுடிந்ததின் பிறகு சாப்பிடுவேனென்றெண்ணினான். உடனே அவனுடைய உபாத்தியாயன் பிள்ளைகள் உள்ளே போகும்படி குறிகாட்டினான். அவர்களோடே தாமு என்பவனும் உள்ளேபோய்த் தனது சீலையில் அந்த வாழைப் பழத்தை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்து அன்று பின்னேரமுழுவதும் ஆறுதலற்றவனும் மனநோவுள்ளவனுமிருந்தான். அப்படியிருக்குஞ் சமயத்தில தாமு அந்தப் பழம் உன்னுடையதல்ல. நீயதை வைத்திருக்கவும் படாது, பள்ளிக்கூட முடிந்ததின் பிறகு அதைத் தின்னவும்படாது என்று சொல்லுமாப்போலே அவனுடைய இதயத்தில் தோற்றிற்று. தாமு என்பவனை அப்படிச் செய்யப்படாதென்றெச்சரித்தவிது சிவசாட்சி. ஏனென்றால், தாமு என்பவன் பொல்லாப்புச்செய்ய உன்னினதேயல்லாமல யாதொரு தப்பிதமான காரியத்தை இன்னஞ் செய்யவில்லை. வாழைப்பழமும் அவனுடைய மடியிலேதானே பத்திரமாயிருந்தது. அந்தப் பழம் போகவேண்டிய பொடியனுக்கும் அதைக் கொடுக்க அவன் இன்னந் தொடங்கவுமில்லை. அவன இதைத் தனித்த இடத்திலே கொண்டுபோய்த் தின்னவாரம்பிக்கவுமில்லை. ஆனாலும் சிவசாட்சியானது அவன் செய்யப்போகிறகெட்டகாரியத்தைப்பார்த்து அவனையெச்சரித்தது.

அப்படியே நாங்கள் செய்ய உன்னுகிற தப்பித காரியங்களையுஞ் செய்யாதபடிக்குச் சிவசாட்சியானது பலமுறையும் எச்சரிக்கின்றது. அவர்கள் அதைச் செய்யமாட்டோமென்று நிர்ணயம்பண்ணினாலொழிய மற்றப்படி அது அவர்கள் சமாதானமுள்ளவர்களாயும் மனப்பாக்கியமுள்ளவர்களாயும் இருக்கவிடாது. தாமு என்பவன் அன்றுபின்னேரம் முழுவதும் மனநோவுள்ளவனும அசந்தோஷமுள்ளவனுமிருந்தபடியால் வேறேதாகுதல் காரியத்தைப் புலனை ஒடுக்கியும் பார்த்தும் பள்ளிக்கூடம்விட்ட அச்சணமே ஓடிப்போய் அந்த வாழைப்பழத்தை உடையவனிடத்தில ஒப்புக்கொடுப்பேனென்று தீர்மானம்பண்ணுமளவுஞ் சிவசாட்சியானது அவனை ஆறுதலாயிருக்கவிடவில்லை. அப்போ அவனுக்கு மனதுக்காறுதல வந்தது. அவனும் யாவரமறுபடியும் நெஞ்சலயிலாமல் மனப்பாக்கியவானானான்.

கேள்வி.

இந்த நெறியிற் பாயிரத்திற் சொல்லப்பட்ட காரியங்களைச் சொல்லு?

நாமியாதாமொரு தப்பிதமான காரியத்தைச் செய்ய நினைக்கும்போது அல்லது உத்தேசிக்கும்போது சிவசாட்சி அல்லது மனச்சாட்சி என்ன சொல்லுகுது?

எச்சரிப்பாவதென்ன?

தாமு என்பவனையும் வாழைப்பழத்தையும் பற்றிக் கூறப்பட்ட சரித்திரமுனக்கு நினைப்பாயிருக்குந்தா?

அந்த வாழைப்பழந் தாமுவுடையதுதானோ?

ஆராகுதல் போட்டுவிட்ட உடைமைகளை ஒரு பொடியன் கண்டெடுத்தானால், அவன் அதைக் கண்டெடுத்தபடியால் அது அவனுடையதுதானோ? அந்த வாழைப்பழத்தைத் தாமு என்ன செய்யவேண்டும்? ஒரு பொடியன் அல்லது பொடிச்சி யாதாமொரு பொருளைக் கண்டெடுக்கும்பொழுது அவர்களென்ன செய்யவேண்டியது?

அன்றைக்குத் தாமு என்பவன் என்ன நியாயத்தினால் மெத்தச் சஞ்சலமுள்ளவனாயிருந்தான்?

## MR. POOR'S LETTERS TO HIS LATE PUPILS.

## NO. 2.

MY YOUNG FRIENDS,

In my introductory letter, I observed, that my object in addressing you through the medium of the press is,

1. To give you an expression of my remembrance of you, and of my continued interest in your welfare.

2. To aid you in understanding the novel and peculiar position, in which you are placed in society, and to turn your attention to some of the more important duties which thence devolve upon you.

3. To invite a reciprocation of views and feelings on your part, that I may become acquainted with your present circumstances, and know something of the results of your experience and observation, thus far on the journey of life.

It is my design, in this letter, to explain what I mean by "the novel and peculiar position in which you are placed in society."

1. You are a class of *educated Hindus* or "*Natives*." On this account you will be regarded as the representatives of your countrymen. The national intellect will, to some extent, be estimated by what may be the developements of your literary character. It was formerly the prevailing opinion among Europeans, and the opinion is still entertained by many, that the Hindus are comparatively defective even in intellect, and incapable of making creditable attainments in the higher branches of learning. Your future course in life will, doubtless, do something towards solving this problem. The problem to be solved, is two-fold; first, whether there be any natural or physical defect in the Hindu mind; or, secondly, whether there be such adverse influences in the climate, or in the domestic, civil, political, or moral state of the Hindus, as must necessarily stamp upon them a character of inferiority.

2. Your position in society is such, as will subject you to close inspection. You are a *spectacle* to many. *Many* will narrowly watch your conduct,—some, from one motive and some from another. They will, though for very different purposes, carefully note both your failures and your successes. Though it be granted, that there is no *physical* defect in the Hindu mind, it is questionable, to what extent it is expedient, in the present state of society, to impart education. It is even objectionable, in the minds of some, that the higher grades of education should be extended to a considerable portion of the native population. Doubtful opinions on this subject will, to some extent, be settled, either more decidedly in favor of native education or more decidedly against it, by what may be seen as the results of your education. You will be regarded as the representatives, not only of your countrymen generally, as before observed, but of those natives especially, who are in a course of education and are candidates for office.

3. You must be regarded as a *class of intruders*.—You are intruding upon grounds already occupied—and occupied by those who can ill afford to give place to you. You are a race of unwelcome competitors for place and office, unexpectedly sprung up. It cannot be denied that you have certain advantages, which must give force to your claims, and enable you to prevail, to some extent, to the disadvantage of those with whom you are called to compete. Whatever may be your *comparative* attainments, you can well afford, other things being equal, to serve at a lower rate than your competitors of European descent.

In this connexion, I may take occasion to say, that almost the only *feature* in mission Boarding School establishments for natives, which I have noticed with regret, is its unfavorable bearings upon a portion of the European community, who have not been favored with corresponding literary advantages, to enable them to maintain their relative standing in society. This feeling of regret is in some measure relieved, by the additional provision, made of late years in Jaffna, both by the missionaries and by the Government, for the education of children of European descent. I have only to imagine my own children to form a part of this community, and an interest is at once excited, and my sympathies sufficiently awakened in behalf of European parents who have to provide for children in this country. But although in proffering your services you may be able to underbid this class of persons of whom I am speaking,—alas! for you, if you are unduly depending upon this circumstance. For it is even now well understood, that the least paid servant often, in the end, becomes the most expensive.

4. Your position is novel and peculiar, *in relation to the Government*. It is peculiarly *important*, and in some respects, *critically* interesting. You have fallen upon auspicious times. The liberal policy, both of General and Social Governments, is such as to open the widest field and the fairest prospects to every native aspirant to office and influence, in the island. It was *not* so in former times. The recent introduction of "Trial by (native) Jury" the appointment of Assessors—the opening, to suitably educated natives, of important places of power and trust, in the civil, medical and other departments of Government service, hold out every encouragement to honest effort and laudable ambition. It is indeed difficult to conceive what more, on this head, could be reasonably desired. Your position however in relation to this subject is critically interesting. For if you, who, as representatives take precedence in point of time, *fail* in your official duties, and prove yourselves to be unworthy to fill places of power and trust, you will not only fall from the eminence on which you now stand in a state of trial and probation, but you will also fall a prey to those who may have envied you in your promotion, and who may profit by your downfall.

(To be continued.)

Digitized by Google

### Principles of English Grammar.

(By William Lennie.)

English Grammar is the art of speaking and writing the English language with propriety.

It is divided into four parts; namely, Orthography, Etymology, Syntax, and Prosody.

#### Orthography.

Orthography teaches the nature and powers of Letters, and the just method of spelling words.

A letter is the least part of a word.

There are twenty-six Letters in English.

Letters are either Vowels or Consonants.

A vowel is a letter, the name of which makes a full open sound.—The Vowels are, a, e, i, o, u, w, y,—The Consonants are b, c, d, f, g, h, j, k, l, m, n, p, q, r, s, t, v, x, z.

A Consonant is a letter that has a sound less distinct than that of a vowel: as l, m, p.

A Diphthong is the union of two vowels; as ou in out.

A proper Diphthong is one in which both the vowels are sounded; as, oy in boy.

An improper Diphthong is one in which only one of the two vowels is sounded; as, o in boat.

A Triphthong is the union of three vowels, as eau in beauty.

A syllable is a part of a word, or as much as can be sounded at once; as far in farmer.

A Monosyllable is a word of one syllable, as fat.

A Dissyllable is a word of two syllables; as, Pe ter

A Trisyllable is a word of three syllables; as but ter fly.

A Polysyllable is a word of many syllables.

☞ Why should judgement, abridgement, &c. be spelled without e? How can g, be soft like j, without it? See Walker's Dictionary under judgement.

### இங்கிலிசுப்பாஷையைக் கற்கப்புகு மாணாக்கருக் குபயோகமாதற்பொருட்டு வழக்கத்தமிழ் நடையாக மொழிபெயர்க்கப்பட்ட வில்லியம் லெனிஸ் என்ற துரை இங்கிலிசிற்செய்த இலக்கணச்சாரம்.

இங்கிலிசிலக்கணமாவது இங்கிலிசுப்பாஷையை வழுவில்லாமற் பேசுதற்கும் எழுதுதற்கும் விதிக்கப்பட்டநூலாயிருக்கின்றது. அஃது நான்குவகுப்பாய்ப்பகுக்கப்பட்டிருக்கின்றது. அவையாவன எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமும், தொடர்மொழியதிகாரமும் யாப்பதிகாரமுமேயாம்.

#### க. எழுத்ததிகாரம்.

எழுத்ததிகாரமென்பது எழுத்துக்களின் வடிவையும் ஒலியையுஞ் சொற்களைப்பிழையில்லாமலெழுதும்முறைமையையுங் கற்பிக்கின்றது.

எழுத்தென்பது மொழியினது சிறிய உறுப்பாயிருக்கின்றது.

இங்கிலிசுப்பாஷையிலிருபத்தாறெழுத்துண்டு.

எழுத்துக்கள் உயிர்களும் மெய்களுமென இருவகைப்படும்.

உயிரெழுத்தென்பது நிறைவுந் தெளிவுமான ஒலியோடுகூடி உச்சரிக்கப்படும் எழுத்தேயாம்.

உயிரெழுத்துக்கள், a, e, i, o, u, w, y. என்பவைகளும் மெய்யெழுத்துக்கள் b, c, d, f, g, h, j, k, l, m, n, p, q, r, s, t, v, x. z. என்பவைகளுமாம்.

மெய்யெழுத்தென்பது உயிரெழுத்தைப்போலநிறைவொலியைக்கொடாத எழுத்தாம்—l, m, p, என்ற எழுத்துக்கள்போல.

உயிரிணையென்பது இரண்டுயிரெழுத்துக்களின் புணர்ச்சியாம். out என்றசொல்லில o u என்றவெழுத்துக்கள் வந்தனபோல.

நிறையொலியுயிரிணையென்பது இரண்டுயிரெழுத்துக்களும் ஒலிக்கின்ற உயிரிணையாம். boy என்றசொல்லில் o y என்றவெழுத்துக்கள் ஒலித்தனபோல.

குறையொலியுயிரிணையென்பது இரண்டுயிரெழுத்துக்களுள் ஒன்றுமாத்திரம் ஒலிக்கின்ற உயிரிணையாம் boat என்றசொல்லில் o என்ற எழுத்து ஒலித்ததுபோல.

உயிர்மும்மையென்பது மூன்றுயிரெழுத்துக்களின் புணர்ச்சியாம். beauty என்றசொல்லில் e, a, u, என்றவெழுத்துக்கள் வந்தனபோல.

அசையென்பது மொழியினதுறுப்பாய் அல்லது ஒரேமுறையிலுச்சரிக்கப்படக்கூடிய அளவாயிருக்கின்றது. Farmer என்றசொல்லில் far என்பதுபோல.

ஓரசையாலாகிய சொல் ஓரசைச்சொல்லெனப்படும். far என்பதுபோல.

ஈரசையாலாகிய சொல் ஈரசைச்சொல்லெனப்படும். Pe-ter என்பதுபோல.

மூவசையாலாகியசொல் மூவசைச்சொல்லெனப்படும். but-ter-fly என்பதுபோல.

பல அசையாலாகிய சொல் பல அசைச்சொல்லெனப்படும்.

---

(Brief descriptions of the most remarkable birds, illustrated by cuts on a comparative scale.)

### The Ostrich.—தீக் குருவி.

தீக்குருவி உலகத்திலுள்ள பட்சிகள் அனைத்திலும் மெத்தப் பெரிதாயிருக்கின்றது. எப்படியென்றால் ஒரு மனிதன் குதிரையிலே ஏறியிருக்கிறது எவ்வளவு உயரமாய்த் தெரியுமோ அப்படியேயிதின் உயரமும் இருக்குமென்று வழிச்செல்வோர் மெத்த உறுதியாய்ச் சொல்லிவருகிறார்கள். ஆனாலும் இங்கிலாந்து தேயத்துக்குப் பிடித்துவந்த குருவிகளிற் சிலது ஏழடிக்கு மேலே இருந்தன. அதினுடைய தலையுஞ் சொண்டுந் தாராவைப்போலே. கழுத்து அன்னப்பட்சியைப் போலே. அப்படியிருந்தும் இது மெத்தப் பெரிதாயிருக்கின்றது. காலுந் தொடையும் பேட்டுக்கோழியைப் போலே. அதின் முழுச் சடலத்தையும் எடுத்துப் பார்த்தால் ஒட்டகம்போலே இருக்கும் அது பலபதார்த்த பட்சணியாயிருக்கிறதினால், தோலையும் கண்ணாடி முதலான வீதுருவையும் அனலெழுக்கியையும் உறட்டியையும் மயிர்க்குழற்சியையும் இதுபோன்ற இன்னுமெண்ணடங்காப் பதார்த்தவர்க்கங்களையும் பட்சிக்கும். அது காட்டுப் பட்சியாயிருந்தாலும் சில வேளைகளில் வீட்டுப்பட்சியாயிருக்கும்படி பழக்கிக்கொள்ளலாம். இப்பட்சிகள் கூட்டங்கூட்டமாகக் கூடிக்கொண்டு ஆசியா ஆபிரிக்கா முதலிய இடங்களிலுள்ள வனாந்தரவெளியிலே திரியும்.

தீக்குருவியின் முட்டை ஒரு சிறு பாலகனுடைய தலையளவு பருப்பமுள்ளதாயிருக்கும். முட்டையிட்டு ஆணும்பெண்ணுமாக மாறிமாறி முட்டைக்கு மேல்படுத்து முட்டையிற் கருக்கொள்ளப்பண்ணும். பகலிலே காங்கை மிகுதியானபடியால் இரவிலே மாத்திரம் மெத்தப் பத்திரமாய்க் காவல்பண்ணிக்கொள்ளும். அப்படியிருக்கிறபோதிலே, வெகுவெகு முட்டைகளைக் குஞ்சுகள் கொத்திக் குடிக்கிறதற்குக் கூட்டுக்கு நாலு பக்கத்திலும் பரப்பி வைக்கும்.

தீக்குருவியின் இறகுகள் மெத்த அலங்கிருதியாயிருக்கிறபடியால் சனங்கள் வேட்டையாடிப் பிடித்து வாயிலிருக்கும் இறகுகளைப் பிடுங்கி எடுத்துக்கொள்ளுகிறார்கள். இன்னும் முற்காலத்திலே இருந்தவர்கள் இறகுகளை எடுத்துத் தங்கள் தலைச்சிரசிலே அணிந்ததுமன்றித் துரைசாணிகளுந் தங்கள் உடுப்பை இறகுகளினால் அலங்கரித்துவந்தார்கள். தீக்குருவிகளைப் பிடித்துப் பழக்கக் குதிரைபோலேறிக்கொள்ளுகிறார்கள். (Moore) மூவர் என்பவர் ஆபிரிக்காவில் ஒரு மனிதன் தீக்குருவியிலேறிப் பிரயாணம்போனதைக் கண்டேனென்று சொல்லுகிறார். அப்படியே (Adanson) ஆதான்சன் என்பவரும் தன்னிடத்திலே இரண்டு தீக்குருவிகள் நின்றதென்றும் அதில் வலியது ஒரு இங்கிலிஸ் குதிரையிலும் அதிகக் கதியாய் இரண்டு காப்பிரிகளையும் வைத்துக்கொண்டோடுமென்றுஞ் சொல்லுகிறார். இந்தத் தீக்குருவி தன்னிற் பாரமேற்றினதென்று கண்டவுடனே அது தன்னாற் கூடியளவு கதியாய் ஓடி அந்தக் குறிச்சியைப் பலமுறையுஞ் சுற்றிக் கடைசியாகச் சனங்கள் அது ஓடுகிற வழியில் எதையாகுதல் விட்டு மறித்துக்கொள்வார்கள். பின்னால் வருங் கதையைப் படிப்பாளியாகிய (Thunderberg) தண்டப்பாக்கென்பவர் சொல்லுகிறார். எப்படியெனில்,

ஒரு நாளில் இவர் ஒரு பேட்டுத் தீக்குருவி கூடுவைத்துக்கொண்டிருக்கிற இடத்துக்குச் சற்றே தூரமாய்ப்போனார். அப்பொழுது அந்தப் பட்சி பறந்து அவர் அந்தக் குஞ்சுகளையும் முட்டைகளையும் கவனியாமலிருக்கும்படி அவரை விட்டுத் துரத்திக்கொண்டுபோனது. அவர் தமதுடைய குதிரையை அந்தப் பட்சிக்கு நேரே விட்டுப் போகிறபோதெல்லாம் அந்தக் குருவியும் பத்துப் பன்னிரண்டடிக்கப்பால அவரைத் துரத்திக்கொண்டுபோய்விட்டது; அவர் மறுபடியும் அப்படி வந்தவுடனே அவர் நின்றவிட

Digitized by Google



Digitized by Google

Digitized by Google

த்துக்கு மெத்தத் தூலையிலே போகுமளவும் அவரைத் துரத்திக்கொண்டுபோயவிட்டது

தீக்குருவியை ஆராகுதல் கோவப்படுத்தும்பொழுது அது சில வேளைகளில் மெத்தப் பயங்கரப்படத்தக்க விதமாய் வாயைஅங்காந்து இரைந்துறுமுகுது, தன்னுடனெதிர்க்கக்கூடாத சத்துருக்களைக் கண்டால் அவைகளை வென்றுவிடுவேனென்றெண்ணிக் கொக்கரித்துக் கிறுகிவென்று கத்துகுது. ஆனாலும் இராக்காலங்களிலே சிங்கத்தின் இரைச்சலுக்குச்சரியாய் மெத்த இரங்கப்படத்தக்கவையாய் இரைந்துகொண்டிருக்கும். மறு வேளைகளில் எருத்துமாட்டைப்போலத் தனுப்போடும். அது பலமுறையும் மரண அவத்தையிலிருக்கிறதென்று சொல்லத்தக்கவையாகப் பெருமூச்சுவிட்டுக்கொண்டிருக்கும். இதைப் பற்றி மீகாவின் தீர்க்கதரிசனம்(க. அதி. அ.) வசனத்திற்சொல்லியிருக்கிறதாவது "இதினிமித்தம் நான் புலம்பி அலறுவேன். பறிகொடுத்தவனாகவும் அம்மணமாகவும் நடப்பேன். நான் வலுசர்ப்பங்களைப் போலப் புலம்பலையுந்தீக்குருவியைப்போலத் துக்கிப்பையுங்கேட்கப்பண்ணுவேன்."

## கிறிஸ்துமதம்—CHRISTIAN.

### Rules for the conduct of a Christian life.

(Abridged from "the practice of True Devotion" by Robert Nelson, Esq.)

*I. On rising from Bed in the Morning*.—As soon as thou awakest from sleep dedicate thy first thoughts to God, whose providence has preserved you from the dangers of the past night; adore his goodness, and express your thankfulness in some short ejaculations; exercise your love and affection towards him, or any other virtue your thoughts shall suggest to you.

Use yourself to a constant hour of rising and continue in bed no longer than you have offered up your first thoughts to God: this will prevent laziness, and hinder vain, loose, and extravagant thoughts, which will be ready to rise in our minds. when we amuse ourselves in bed long awake. In dressing yourself, reflect upon the true end of clothing, which is, to preserve modesty and health, to distinguish quality and sex; which will be useful to guard you from vanity and pride: and in all those actions that relate to dressing, let no lightness or immodesty ever appear. Remember to reverence yourself.

காலமே நித்திரையை விட்டெழும்புவதைப்பற்றி.—நித்திரையைவிட்டு நீங்கள் விழிக்கும்போது இராத்திரியில் உங்களுக்கு வர இருந்த மோசங்களில் நின்று உங்களை விலக்கிக்கொண்ட பராபரனுக்கு உங்களிருதயத்தில்வருமுதலெண்ணங்களைநேரிட்டுஅவர்உங்களுக்குச்செய்த நன்மைக்காக அவருக் கிஸ்தோத்திரஞ்செலுத்தி அதற்காக உங்கள் உபகாரநன்றியறிதலைச் சில சிறுச்செபங்கள் வழியாய்க் காட்டி, அவர்பேரில் நீங்கள் கொண்டிருக்கும் இரக்கத்தையும், நேசத்தையும், அல்லது உங்கள் உத்தேசத்தின்படி சன்மார்க்கமாயிருக்கிற எண்ணங்களையுங் காட்டுங்கள். ஒரே குறித்த நேரத்தில் எழும்பவும், எழும்பி உங்கள்மனதில் வருமுதலெண்ணங்களைப் பராபரனுக்கு வெளிப்படுத்தின பிறகுதானே படுக்கையைவிட்டு உடனே வெளிப்படவும் உங்களை ஏதுபண்ணிக்கொள்ளுங்கள். ஏனென்றால், இதுவே சோம்பலையும், படுக்கையில் வெகுநேரமாய் விழித்திருப்பதால் மனதிலெழும்ப வேதுவாயிருக்கும் வீணான கெட்டஎண்ணங்களையும் விலக்கும்.

புடைவைகளைப்பற்றி.—நீங்கள் புடைவைகளை உடுக்கவேண்டிய பிரதான நோக்கமென்னவென்றால், உங்கள் மரியாதையையுஞ்சுகத்தையும் பேணிக்கொள்வதற்கும், இன்ன சாங்கம் இன்னசாதியென்ற வேற்றுமையைக் காட்டுகிறதற்குமாகத்தானே. அதுவே உங்கள் அகந்தையைவிட்டு நீக்கும். இன்னும் உடுப்பைப் பற்றியிருக்குஞ் சகலசெய்கைகளிலும அவமதிப்பு, மரியாதையீனம் என்பவைகள் உங்களில் அணுகாதபடிக்குப் பாருங்கள். உங்கள் சங்கையைக் காத்துக்கொள்ளவேணுமென்ற எண்ணத்தைக் கொள்ளுங்கள்.

### Scriptural proofs of the Doctrines and Duties of Christianity.

CONCERNING THE BEING AND ATTRIBUTES OF GOD.

1. *There is but one God,—no other like him.*

"Hear, O Israel, the Lord our God is one Lord." Deut. vi. 4.
"The Lord he is God, there is none else." Deut. iv. 35.
"Thou art God, alone." 2 Kings xix. 15.
"Beside me there is no God, I know not any." Isaiah xliv. 6, 8.
"I am He, and there is no God with me." Deut. xxxii. 39.
"Before me there was no God formed." Isaiah xliii. 10.
"There is none like unto the Lord our God." Exod. viii. 10.
"Who is like unto thee, O Lord, amongst the gods, who is like thee, glorious in holiness, fearful in praises, doing wonders." Ex. xv. 11.
"Lord God of Israel there is no God like thee, in heaven above, or on earth beneath, who keepest covenant and mercy with thy servants that walk before thee with all their heart." 1 Kings viii. 23.
"Thou shalt know no God but me." Hos. xiii. 4.

### பராபரனுடைய தன்மையையும் இலட்சணங்களையும் பற்றிய திருட்டாந்தம்,

க. ஒரேபராபரன் உண்டென்பதைப்பற்றி.

இஸ்ரவேலே! கேள் நம்முடையபராபரனாகிய கர்த்தர் ஒரேகர்த்தரானவர். ரு மோசே சு. அதி. ச வச.
கர்த்தரேபராபரன்.அவரேயல்லாமல் வேறொருவருமில்லை,ரு. மோசே. ச. கடு.
தேவரீர் ஒருவரே. உ. இராசா. யகூ. ரு.
நம்மைத்தவிரத்தேவனில்லை. நம்மைத் தவிர வேறொரு தேவனுண்டோ, ஒருவனையும் அறியோம். ஏசாயா. சச. சு, அ.
நாமேயவர் நம்மோடேவேறேதேவனில்லை. ரு. மோ. கஉ, கூ.
நமக்குமுன் ஏற்பட்டதேவனில்லை ஏசாயா. சங. ய. [அ. ய.
எங்கள்பராபரனாகியகர்த்தருக்கொப்பானவரில்லை. உ: மோசே.
தேவர்களில் உமக்கொப்பானவனார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும் துதிகளிற்பயப்படத்தக்கவரும் அற்புதங்களைச்செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவனார்? உ. மோசே யரு. யக.
இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தாவே! தங்கள்முழுஇருதயத்தாலும் உமக்குமுன்பாக நடக்கிற உம்முடைய ஊழியக்காரருக்கு உடம்படிக்கையையுங் கிருபையையுங்காக்கிற தேவரீரைப்போலே உயரப்பரமண்டலங்களிலுங் கீழேபூமியிலும் யாதொருதேவனும் இல்லை, க. இராசா. அ. உங.
நீ நம்மைத்தவிர வேறேதேவனை அறியவொன்றுதே. ஒசே யங, ச.

### விவிலியவேதாகமத்தைக் குறித்தோர் வார்த்தை.

A few words about the Bible.

வேதாகமத்தில்மாத்திரமே பராபரன் அருளின ஏகசத்திய வார்த்தைகள் அடங்கியிருக்குதென்றும் பொல்லாதவர்கள் இரட்சண்ணியமடையும் வழியை ஏதிலிகளும் அறிவிலிகளும் வாசித்து விளங்கி இரட்சிக்கப்படும்படி அதிக துலாம்பரமாய்க் காட்டப்பட்டிருக்குதென்றும் கிறிஸ்துமதாநுசரணையுள்ளவர்கள் விசுவாசிக்கிறார்கள்.

இவ்விசுவாசத்தின்படியே கிறிஸ்தவர்களாயிருக்கப்பட்டவர்கள் மற்றேனையோரும் இந்த வேதாகமத்தை வாசித்து அதை விளங்கிக்கொண்டு மோட்சத்துக்குப் போகும் பாதை இன்னதென அறியும்படி விரும்புகிறார்கள். உலகத்திலுள்ள புத்தகங்கள் அனைத்திலும் விவிலிய வேதாகமமே அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிறபடியால் எவ்வகைப்பட்டவர்களுக்குள்ளும் அதைப்பிரபலியஞ்செய்யும்படி வேண்டிய முயற்சிபண்ணுகிறபடியால், அஞ்ஞான மதம் பரம்பிய எவ்வெவ்விடங்களுக்குங் குருமாரை அனுப்பி வேதாகமத்தை அவரவர்களுடைய சொந்த பாஷையிற் திருப்பி அறிவிகளுக்குணர்வு கொளுத்துகிறார்கள்.

அல்லாமலும் "நீங்கள் புறப்பட்டு உலகத்தார் எல்லாரையுஞ் சீஷராக்கிப் பிதாக்குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுங்கள்." என்று கிறிஸ்துநாதர் கொடுத்துப்போன கட்டளைப்படி கிறிஸ்தவர்களுடைய நன்முயற்சியைக்கொண்டும் அவர்கள் கொடுக்கும் பணத்தைக் கொண்டும் வேதாகமத்தைக் கிட்டத்தட்ட ௱ விதப் பாஷைகளில் மொழிபேர்த்தநேகமாயிரம் பிரதிகளை அச்சிற் பதித்து எங்கும் பரப்புகிறார்கள்.

Digitized by Google

## பஞ்சதந்திரக் கதை.
### மூன்றவது
### சந்திவிக்கிரகம், அல்லது அடுத்துக்கெடுத்தல்.
## PANCHA-TANTRA-KATEI.
*The art of conquering an enemy by means of an affected friendship.*

[Continued from page 304.]

யானை தொட்டாலும் பாம்பு மோந்தாலும் அரசனைத்தானுந் துர்ச்சனன் மரியாதைபண்ணினாலும்உயிர்ச்சேதம் வரும். ஆதலால் இதற்கு ஏதாவது உபாயம் யோசிக்கவேண்டுமென, அப்போது சில முயல்கள் உயிரைக் காப்பாற்றும் பொருட்டுப் பூமியை விட்டுவிடலாமென்றிருக்கிறதினால் இவ்விடத்தை விட்டு விடவேண்டுமென, இதைக்கேட்டு வேறுசில முயல்கள் நம்முடைய பெரியோர்கள் வாழ்ந்த விடத்தை விட்டு வேறிடத்திற் போகாமல் யானைகள் அஞ்சத்தக்க தந்திரம் எடுக்கவேண்டும். நஞ்சில்லாப் பாம்பும் படமெடுத்தால் அதற்கு நஞ்சிருந்தாலும் இல்லாவிட்டாலும் பயங்கரமாயிருக்கிற படத்தின் வடிவைப் பார்த்து மனிதர்கள் பயப்படுகிறார்களென அதைக் கேட்டொரு முயல் சொல்லுகிறது; யானைகள் பயப்படும்படி ஒரு உபாயஞ் சொல்லுகிறேன்; என்னென்றால், விசயதத்தனென்னும் நம்முடைய சுவாமி சந்திரமண்டலத்திலிருக்கிறான். அவன் தூதனுப்பினனென்றொரு நிமித்தம் வைத்தொரு பொய்த் தூதனை அவர்களிடத்துக்கனுப்பினால் எம் காரியம ஆகுமென, இதைக்கேட்டவுடனே எல்லாம அப்படியே நிச்சயித்து நெட்டைக் காதனைப் பார்த்துச் சொல்லுகின்றன —என்னென்றால் நீ சாதுரியவான்: எதிரிகளைச் சமாதானம் பண்ணுகிறவனுந் தூதகாரியத்தில்நிபுணனுமாயிருக்கிறாய். மௌட்டியமில்லாமையும், சோம்பாமையும், பொய்யாமையும், ஊகித்தறிதலுந் தூதலட்சணமென்றுசொன்னவற்றிற்கு நீயே வாசஸ்தானமென்று நினைக்கிறோமாகையால் நீ போனால் நம்முடைய காரியங் கைகூடும். மூடத் தூதனை அனுப்பினாற்காரியங் கெட்டுப்போமென்று சொல்லி அதை அனுப்பப் பின்பது போய் யானைகள் வரும்வழியில் ஓர் உயர்ந்த மேட்டிலுட்கார்ந்திருந்து யூதபதியைப் பார்த்துச் சொல்லுகிறது, அடா துஷ்டா யானையே, வெட்கத்தை விட்டிந்த மடுவில் வந்து பலவகைப்பட்ட விளையாட்டு விளையாடுகிறாய் ஆதலால்நான் எல்லாரையும்அடித்தெறிந்துவிடுவேனென, அதைக்கேட்டு யானை உன் பேச்சைக்கேட்டு நான் மிகவும் ஆச்சரியப்படுகிறேன் ஆனால்நீ ஆரென, முயல்விசயதத்த இராசனுடைய தூதன் அவன் கட்டளையை உனக்குச் சொல்வேன்; அவன் சந்திரமண்டலத்திலிருக்கிறபடியாற் சந்திரன் உன்னிடத்திற்கு அனுப்பினனென, இதைக் கேட்டு இவன் வலியவனுடைய தூதனென்றெண்ணி அதைப் பார்த்துச் சந்திரனுடைய கட்டளை என்னவெனப் பிறகு அது, நீ இங்கே வந்து காணமில்லாமற் கிரீடைசெய்து வெகு முயல்களைக் கொன்றாய். ஆகிலும் நானொரு தரம் பொறுத்தேன் இப்போதுனக்கு உயிர்மேலாசையிருந்தால மீண்டிங்கே வரவேண்டாமென்றிப்படிச் சந்திரனுடைய கட்டளையாயிருக்கிறத்தை உனக்கு நான் சொன்னேன். இப்போது இதற்குப் பிரத்தியுத்தரவுசொன்னால்சுவாமி திருவடிகட்கறிவிப்பேனென, யானை அவனிடத்திற்கு என்னை அழைத்துக்கொண்டுபோ பிறகு நான் உன் எசமானனுக்கு நமஸ்காரம்பண்ணி வேறொரு குளத்திற் போவேனென இதைக் கேட்டு முயல், நீ தனியாய் என்னோடு கூடவா உனக்குச் சுவாமியைக் காண்பிக்கிறேனெனப் பிறகு இரண்டும் போகையில் ஒரு ஏரியின் அருகே போய் முயல் யானையைப் பார்த்து,அந்தச் சந்திரன் தண்ணீர்க்குள்ளே வந்திருக்கிறான அவனை நமஸ்கரித்துவிட்டுச் சுடுகெனப் போ. இல்லாவிட்டால அவனுடைய சமாதிக்குப் பங்கம் வந்தால் அவற்கு வெகு கோபம் வருமென, அப்போது யானை பயந்து சந்திரவிம்பத்துக்கு நமஸ்காரம்பண்ணிவிட்டுப் போயிற்று. அதுமுதற்கொண்டு முயல்கள் அங்கே சுகமுற்றிருந்தன. ஆகையாற் பெரியோர்களை அடுத்திருந்தால் மலைபோல வந்த வினை சூரியன் முன்பனிப்போல நீங்கும். கொல்லையிற்குற்றியை அடைந்த புல்லு உழவருழுபடைக்கெடுமோ? துஷ்டர்களுடைய கூட்டுறவு கணப்போதிருந்தாலுங் கெடுதிவரும். முன் ஒரு முயலும் ஆந்தையுஞ் சண்டையிட்டுக் கூம்டல்லனருகே போனவுடனே இரண்டையும் அது கொன்றதுபிரோவெனக் கேட்டுப் பறவைகள் காகத்தைப் பார்த்து அதெப்படியெனக் காகஞ் சொல்லத் தொடங்கிற்று.

(இன்னும் வரும்.)

### ௬. அதிகாரம்.
### வாழ்க்கைத் துணை நலம்.

ருங. இல்லதெனில்லவண் மாண்பானாலுள்ளதே
னில்லவண்மாணாக்கடை.

பு. ஒருவனுக்கு மனைவி (நற்குண நற்செயல்களோடிய) சிறப்பானால் இல்லாதது எது, அவள் அப்படியாகாதபோது உள்ளது எது?

If his wife be eminent (in virtue) what does (that man) not possess? If she be without excellence, what does (he) possess?

*Drew.*

What is deficient with a virtuous wife
If in the wife defect, then what is all
'This world can give?

*Ellis.*

ருச. பெண்ணிற்பெருந்தக்கயாவுளகற்பென்னுந்
திண்மையுண்டாகப்பெறின்

பு. ஒருவன் அடையப்படும் பொருள்களுள் மனைவியைக் காட்டிலும், பெருமைதங்கிய பொருள்கள் எவையுண்டு, கற்பென்னுந் திண்மையுண்டாகப்பெறின் பதிவிரதமென்னுந் திடமுண்டாகப்பெற்றால்.

What is more excellent than a wife, if she possess the stability of chastity?

*Drew.*

Than virtuous woman what more excellent
Who firm in mind, her wedded faith maintains?

*Ellis.*

### தை ௴.

சாதிமு. தைமு. ௰௨தீ. முதல் மாசி ௰௩தீ. வரைக்கும்.

| E. Date. | தமிழ்த் தேதி | வாரம். | நட்சத்திரம். | | திதி. | | யோகம் | | கரணம். | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | ௧ | வி | கா | ௰௪ll | எ | ௨௫ | சு | ௫௭l | வி | ௨௫ |
| 13 | ௨ | வெ | ரோ | ௰௯ll | து | ௨௫ll | ஐ | ௫௪l | பா | ௨௫ll |
| 14 | ௩ | ச | மி | ௰௭l | தி | ௨௪lll | மா | ௫௰l | தை | ௨௪lll |
| 15 | ௪ | ஞா | தி | ௯௭ | ச | ௨௨lll | வை | ௪௫ | வ | ௨௨ll |
| 16 | ௫ | தி | பு | ௰௬ll | 0 | ௰௯lll | வி | ௯௯ | ப | ௰௯lll |
| 17 | ௬ | செ | பூ | ௰௯lll | பி | ௰௫lll | ஐ | ௯௨lll | தவு | ௰௬ |
| 18 | ௭ | பு | ஆ | ௰l | து | ௰௬ | ஆ | ௨௮ | கர | ௰௬ |
| 19 | ௮ | வி | ம | ௯lll | தி | ௫lll | சவு | ௰௭ | வி | ௫lll |
| 20 | ௯ | வெ | பூ | ௨lll | ச | l | சோ | ௰l | பா | |
| | | | உ | ௫௫lll | ப | ௫௪ | | | தவு | ௨௭ |
| 21 | ௰ | ச | அ | ௫௪ll | ஷ | ௪௮ll | அ | ௨ll | கர | ௨௬l |
| | | | | | | | சு | ௫௨l | | |
| 22 | ௰௧ | ஞா | சி | ௫௰lll | ஸ் | ௪௬ | தி | ௪௭l | வி | ௰௫lll |
| 23 | ௰௨ | தி | சு | ௪௭ll | அ | ௯௭lll | சூ | ௪௰ | பா | ௰ll |
| 24 | ௰௩ | செ | வி | ௪௪lll | ந | ௯௯ll | க | ௯௯l | தை | ௫lll |
| 25 | ௰௪ | பு | அ | ௪௨lll | த | ௨௯lll | வி | ௨௭ | வ | ௨ |
| | | | | | | | | | வி | ௨௮ |
| 26 | ௰௫ | வி | கே | ௪௨ | எ | ௨௭l | அ | ௨௯lll | பா | ௨௭ll |

Digitized by Google

# SUPPLEMENT TO THE
# உதயதாரகை.—MORNING STAR.

௩. புத். சஞ்சிகை க.]   ௲அ௱ச௩ (ஹு). தை. ௰௨, தேயதி வியாழக்கிழமை, Thursday, January 12, 1843.   [VOL. III. No. 1.

உதயதாரகையின் முகாமைத்தரைக்கு

(On the impropriety of attending heathen dances.)

அருமையானஐயாவே,

ஐரோப்பையருகிய நான் கிறிஸ்தவனாயிருந்தும் நடந்துகொண்ட ஒழுக்கினத்தைவிட்டு என்மனதிலேயுண்டான சொல்விமுடியாத விசாருலத்தையும் மனஸ்தாபத்தையும் அறிவிக்கும்படியெழுதுகிறேன். இத்தத்தப்பிதத்தைக் கண்டவர்களுங் கேட்டவர்களுமாகிய இவ்வூரிலுள்ள சிநேகிதருடைய மனதில இதைப்பற்றிய குறைச்சலான எண்ணந் தோன்றுதபடிக்கு இதுகாரியத்தைப் பிரசுரஞ்செய்யுமுங்கடாரகைப்பத்திரிகையில் (ரு௰) கடுதாசிகளை அவர்களுக்கு நான் பிரசுரஞ்செய்யும்படி எனவாமனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

அஃது என்னவெனில், வடதேசத்திலிருந்து இவ்விடம் வந்திருக்கிற கூத்தாடிகள் போனவெள்ளிக்கிழமைமிராத்திரி என் வீட்டுக்கருகாகக்கூத்துவிளையாட இருந்தபடியால் நானும் அவ்விடத்திற்கு வரும்படி எனக்குச்சிலர் கேட்டுக்கொண்டார்கள். நான் சிறுபராயந்தொட்டுஎன் னூரவர்களுக்குள்ளாகுதல் இவ்வூரவர்களுக்குள்ளாகுதல் இப்படிப்பட்ட வீண்காட்சிகளுக்குப் பிறங்கலாய் நடந்தவனாகையால் அக்கேள்விக்குச்சம்மதியற்றவனாயிருந்தேன். இவ்விதநடப்பைப்பற்றிஐரோப்பாவிலிருக்கப்பட்ட வெனது சிநேகிதருக்குத் தெளிவிக்கும்பொருட்டு அந்தவிடத்திற் போகவும் பட்டதன்றி மற்றப்படி ஒரு சந்தோஷத்தை அல்லது பிரயோசனத்தை அடையும்படியல்ல.

அத்தருணத்திற் போதிய குடிகளிலுள்ள பெண்சனங்கள் அவ்விடத்தில் வந்திருக்கிறதால் யாதாமொரு அவதூறான காரியம் நடவாதென்றெண்ணியும் அதிலேதானும் மோசம்போனேன். ஆகையால் கிறிஸ்தவனென்ற நாமத்தைத் தரித்த அல்லது சன்மார்க்கத்தை விரும்புகிறோமென்று சொல்லுகிற ஐரோப்பையருகுதல் அல்லது இவ்வூரவருகுதல் இப்படிப்பட்ட காரியங்களுக்குடன்படுவது குற்றமென்று என்மனமெண்ணுவதையுங்களுக்கறிவிக்கிறேன். மேலும் அப்படிப்பட்ட செய்கைகள் பராபரனுடைய மகிமைக்கு ஈனமாகவும் மனுஷருடைய நலத்துக்குக் கேடாகவும் அசுத்தமான எண்ணங்களுக்கு அல்லது செய்கைகளுக்கு ஏதுவானதாகவும் நன்னடையைப் பாழாக்குகிறதாகவும் சகலரும் பயங்கரப்படத்தக்கதான நித்திய அழிவுக்கு நடத்தத்தக்கவைகளுமாகையால் அவற்றிற்கு முற்றும் விலகி நடக்கவேண்டியது.

மேலும் இவ்விதமான ஒருகிறிஸ்தவனுக்கடாத நடத்தையினிமித்தம் பராபரனுக்குப் பிரியவீனத்தை உண்டாக்கினதற்காகவும் அவருடைய சத்துராதிகள் அவரைத் தூஷணிக்க இடம்வைத்ததற்காகவும் அதிகதூரம விசனப்படுவதுமன்றி நாட்டியமுதலியவீண்காரியங்களில நான பிறியம்வைத்தருக்கிறேனென்ற எண்ணத்தை அவர்கள் மனதிலிருந்து முற்றும் அகற்றுவதற்கான வழி இதுவேயென்றுமெண்ணுகிறேன்.

பருத்தித்துறை
௲அ௱சஉ ஆடு, தைமீ, ௬தி.

இப்படிக்கு
ஒரு ஐரோப்பையான்.

*To the Editors of the "Morning Star."*

GENTLEMEN,

A question on English Grammar, proposed by S. MANIGAVASAGAM, appeared in No. 17th, Vol. II. demanding whether adverbs do or do not qualify nouns, pronouns, and prepositions. An answer to this, by "a student of H. H. Rajah's Free School, Trevandrum," appeared in No. 21st. It is not my purpose to criticise his answer so much as to elucidate the point at issue. That his answer is totally unsatisfactory can be proved both from his own statements and from the authorities of established grammarians. "I conclude," says he in a part of his communication "*that an adverb never qualifies a noun* or *pronoun, because these two parts of speech have adjectives especially appropriated to that office; and therefore there is neither propriety nor necessity for so employing the adverb.*"

He states that a noun or pronoun has the adjective to qualify it, meaning thereby that it is improper and unnecessary to employ two or more parts of speech to do the same office. Is the office of qualifying a noun or pronoun the exclusive prerogative of the adjective? If so, what propriety is there in having the prepositions and the active verbs to govern a noun or pronoun? Be this reason however, futile as it may, I grant for argument's sake, that an *adverb* never qualifies a *noun* or *pronoun* as he alleges. I would, then, ask what he means in his concluding remarks. He says, "*I conclude therefore that Lennie, Lindley Murray, and others are right in stating the general rule for adverbs as they have done.*" Here, mark the expression "*general rule,*" which shows there are rules of exception. I now challenge him to show what these exceptions are. No doubt, he will say that adverbs qualify other parts of speech than a verb, an adjective, or another adverb. I think, therefore, that he must admit the propriety and necessity of employing the adverb to qualify a noun or pronoun. The examples he has given are in my view, entirely irrelevent to the point under consideration.

MANIGAVASAGAM did admit the general rule given by the author referred to, but his question was simply whether adverbs do or do not qualify other parts of speech than a verb, an adjective and an adverb. In answer to this, I say, it does and may properly and necessarily do so. In proof of this, I shall offer the following reasons. 1st. *From the close affinity which adverbs have to nouns.* It is a fact, that the greater number of adverbs have nouns for their basis, being evidently derived from *number, order, place, time, manners, quality, quantity, interrogation, affirmation, comparison, doubt, negation,* &c. It cannot therefore be strange, if adverbs should qualify nouns. 2nd. *From the respective affinities which exist between adjectives on one side, and adverbs on the other.* Nouns are qualified by adjectives which again are qualified by adverbs, most of which are derived from adjectives. It cannot therefore be strange, if the adverbs derived from adjectives should sometimes qualify nouns in the place of those adjectives; as the *one* boy—the *only* boy, where *one* is an adjective, and *only* is an adverb. 3rd. *From the sameness of expressions found in some words used as nouns, adjectives,* and *adverbs,* as *much little, enough, &c.* 4th. *From the nature of adverbs themselves.* An adverb is a contraction of language and generally expresses by a single word what would otherwise require two or more; one of these two or more words upon examination, is always a noun. It is not therefore strange, that an adverb should qualify a noun when one noun may qualify another. as, *wine-vessel, meadow-ground, head-ache,* &c. 5th. *From the indiscriminate use of adjectives for adverbs* and *vice versa,* observable in prose as well as in poetry. If an adverb may with propriety and necessity be used for an adjective, why may it not properly and necessarily do its office in qualifying a noun? 6th. *Modern* improvements in grammar since the time of Murray have settled the point, that adverbs qualify other parts of speech than the three established ones. In "Hall's Grammatical Assistant," page 26th, we have this rule; "The adverb qualifies nouns, pronouns, adjectives, verbs, participles, and other adverbs:" and in page 33, "adverbs sometimes qualify prepositions," meaning this to be a rule of exception to the general rule given above. Pond's Murray, page 78, is a corroboration of the fact. He is of opinion that an adverb qualifies an article also, as in the example, "*I have not even a dollar.*"

In conclusion, I have to observe that as the grammar follows the language and not the language the grammar, anomalies in language, as, Murray justly remarks, every where encounter us, and as there can be no general rules without exceptions, freedom, with latitude and not unbending inflexibility, is to be had access to in securing the end desired. I therefore conclude that the *adverb* in the main qualifies a *verb,* an *adjective* or another *adverb,* but sometimes it qualifies a *noun,* a *pronoun,* a *preposition* or an *article.*

I am your most obedient,

*Batticotta, Seminary,*
*26th November,* 1843.

H. P. BREWSTER.

On Tamil Grammar.

உதயதாரகாதிபருக்கு ஸ்தோத்திரம்.

சதுரகராதி வாழ்த்துமாலையின் பேரால் டான் விளுவிய விலுவுக்கு உஉ ம். சஞ்சிகையிற் "கந்தர் ஆறுமுகவல்" எனக் கையொப்பம் வைத்து மறுமொழி எழுதினவர் நல்லூர் நகரியில் இருக்கின்ற கலவியில் வல்லவராகிய ஸ்ரீ. கந்தர் ஆறுமுகவரல்லவென்பதைச் சகலரும் அறியக்கடவர்கள்.

Digitized by Google

அதுநிற்க என்னை இகழ்ந்த கந்தர் ஆறுமுகவன் அறிவின்மையாக எழுதினதைக் கடந்து அது தப்பென்பதை இலக்கண விதிகளைக்கொண்டு ஒருத்து எனது விருக்கள் சரியெனக் காட்டுவேன்.

முதலாவது, "பன்னிரண்டுதொகுதி" என்ற பாட்டின் முதலடி இலக்கணத்திற்குச் சரியல்லாமற் பிழையுற்றதோ கண்டிலம், கண்டிலம் எனப் புகன்றார். இவர் இலக்கணமென்ற சொல்லைமாத்திரமறிந்ததன்றி அதன் விதிகளைச் சற்றும் அறியாரென விளங்குகின்றது. அறிந்தவராகில் "பன்னிரண்டு தொகுதி பாரமல்ப ன்னையிம்" என்ற அடியிலெழுத்துப் பிழையினதேவெனத் தேர்ந்து பின்பு சீர்களைப் பிரிக்கட்டும். இலக்கணங்கட்குச் சரியோவெனத் தெரிக்கட்டும்.

உவது. "பாவலர்க்குமாவனுறப்பாடப் பிரசங்கிக்க" என்றது நாவுக்குப் பொருந்தாதபோதே பாவுக்குப் பொருந்துமா? இதன் சீர்களைப் பிரித்தாரே; மகா இஷ்டமாயிருக்கின்றது. இதுசரியென்றெப்புக்கொண்டாரா? தேமாங்காய் புளிமாங்காயிற்கவித்தளைகண்டாரா? கண்டாற் பிழையென்றேன்விண்டிலார்? காரிகையில் "தன்சீர்தனதொன்றிற்றன்றளையாந்தனைவாதவஞ்சி-வஞ்சீர்விகற்பமும் வஞ்சிக்குரித்து வல்லோர் வகுத்த-வெண்சீர் விகற்பங்கவித்தளையாய்விடும் வெண்டளையா-மொண்சீரகவலுரிச்சீர் விகற்பமுமொன்றுதலே" எனவும், "மாஞ்சீர்கவிடிட் புகாகவிப்பாவின் விளங்கனிவக்-தாஞ்சீரடையாவகவலகத்துமல்லாதவெல்லாக்-தாஞ்சீர் மயங்குந் தளைபுகஃதேவெள்ளைத் தன்மை குன்றிப்—போஞ்சீர்கனியிற் புல்லாதயற்றளை பூங்கொடியே" எனவும்-யாப்பருங்கலத்தில் "மூவசைசேரிறுசீர்களுன்றினு-னேர்வரின் வெண்டளை நிரைவரிற் கலியே" எனவும் "நிரையீறல்லாவுரிச்சீர்முன்னர்—நிரைவருகாலைகவித்தளையாகும்" எனவும்-தொன்னூல் விளக்கத்தில, "வெண்டளையெனப்படுவெண்சீரொன்றலு-மியற்சீர்விகற்பமும் எனவிருவகைத்தே" எனவுஞ் சொல்லியிருக்கின்றவைகளைப் பார்த்தறிவாராக. இவைகளைச் சற்று மனவிருப்புற்று மறுகவலையற்று அதிக வேகமாய்க் கற்று கல்வறிவுபெற்று அதன்பின் தர்க்கிக்க வருவாராக.

கவது. "கோர்த்து" என்பதின் பகுதி யாதென்று யான்வினவ, அவர் விடைகொடாது வேறேதோ உபகதை சொல்லுகிறார். இக்கேள்வி கேட்டபோது கந்தர் ஆறுமுகவன் மறுமொழி சொல்லவேணுமென்று குறித்தேனு? இல்லையே. பின்னை இவர் தனக்கியலாத காரியத்தில் தலைப்போடவேண்டியதென்ன? உதயதாரகை இடங்கொடாதென்று பயந்தேன், என் மரியாதையை நயந்தேன், அல்லது அதிகமாய்ப் பொறிப்பேன்; மிகுதியுஞ் செறட்பேன் ஆறுமுகனை ஒறுப்பேன்; அவர் வீரமறுப்பேன்.

இலக்கணவிலக்கியங்களில் மிக வல்லவர்களாகிய ம. நீ நீ. மனப்புலிமுதலியார் குமாரர் சரவணமுத்துப் புலவர் அவர்களும், ம. நீ. நீ. தில்லையம்பலவாணச்செட்டியார் குமாரர் சுவாமிநாதப் புலவரவர்களும் இதன் பேரில் தீர்வையைப் பேசுவார்களாக.

துஆாசஉம் ஆ. கார்த்திகை } இப்படிக்கு
மீ. உகிதி. } சந்திரசேகரன்.

---

(Explanation of a verse requested.)

மனவிருணீக்கி மதிதனைநிகர்க்கும் உதயதாரகையைப் பிரகாசஞ்செய்யும் உத்தமதுரைகளே,

அளந்தவடியதனையாக்கிரட்டிசெய்து
வளர்ந்தபதிலுக்கின்மேல் வைத்துப்
பத்தோடிருநூறுபாவித்தேயீவீரால்.
உற்றதகாதிகையென்றேது.

இச்செய்யுளின் கருத்து என் சிற்றறிவுக்குவிளங்காமையால் தங்கள் தாரகையிலோர் கோணத்திற் பிரகாசஞ்செய்து தாரகையை வாசிக்குங் கற்றுவல்ல புலவர்கள் வழியாய் இச்செய்யுட்பிழையையுந் திருத்தி அத்துடன் அதன் விருத்தியுரையுங் கூடத் தந்து எனதறியாமையை நீக்கும்படி வேண்டிநிற்கிறேன்.

துஅாசஉம் ஞு. மார்கழி மீ. இப்படிக்கு
லஉ தீ. அளவையம்பதி ஓர்மாணுக்கன்.

---

[An Arithmetical Query.]

பரமபதிதுணை.

மகாகனம்பொருந்திய துரையவர்கட்கு வந்தனம்.

தங்கள் உதயதாரகைவழியாய் வெகு பேர்களுடைய சிற்றறிவு பேரறிவாகிறபடியால் எனக்கு விளங்காமலிருக்கிற கணக்கைத் தங்கள் தாரகைக்கெழுதலுற்றேன். அஃதாவது.

ஒரு இராசாவுக்கு (ஏ) பிள்ளைகளுண்டு. அவ்விராசா பெற்றநித்த(ஏ) பிள்ளைகளுக்குமாக ஒரு முத்துமாலை வைத்திருந்தார். அம்மாலையிற் கோத்திருந்த முத்து (லது.) அந்த முத்தில் முதலாம் முத்து ஒருவராகன். இரண்டாம் முத்து இரண்டுவராகன். இவ்விதமாகவிலைபெறிக்கடைசியானமுத்தின்விலைவராகன்(லது.) இப்படியிருக்க இராயனுமிறந்துவிட்டார். பிள்ளைகள்(ஏ)பேரும முத்துமாலையையெடுத்துத் தங்களுக்கு (ஏ) முத்தாகவும் விலையும் எல்லாருக்குஞ் சரியாகவும் இருக்கும்படி பிரித்துக்கொள்ளவேண்டும்.

இந்தக்கணக்கு என் சிற்றறிவுக்கு விளங்காதிருப்பதாலும் பெயரறிவுடையோர்க்கெளிதாயிருப்பதாலும் இதனைத் தங்கள்தாரகையிலோர்கோணத்திற் பிரகாசஞ்செய்து அவ்வழியாக என் மயக்கத்தைத் தெளிவித்து இந்தக் கணக்குச் செய்யுஞ் சூத்திரமும் வகையும் விரிவாய்த் தறக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

யாழ்ப்பாணம் சஉம ஞு கார்த்திகை மீ. இப்படிக்கு
உகக் திகதி. அருளம்பலம் தியாகராயன்.

---

*To the Editor of the Morning Star.*

SIR,

The following table contains accurate particulars of the English version of the Bible, which will probably be interesting to most of your readers.

| In the *Old Testament.* | | In the *New Testament.* | | *Total.* | |
|---|---|---|---|---|---|
| Books | 39 | Books | 27 | Books | 66 |
| Chapters | 929 | Chapters | 260 | Chapters | 1,189 |
| Verses | 23,214 | Verses | 7,959 | Verses | 31,173 |
| Words | 592,493 | Words | 181,253 | Words | 773,746 |
| Letters | 2,728,100 | Letters | 838,380 | Letters | 3,566,480 |

The middle chapter and the shortest in the Bible is the hundred and seventeenth Psalm; the middle verse is the eighth of the hundred and eighteenth Psalm. The twenty first verse of the seventh chapter of Ezra in the English version, has all the letters of the alphabet in it. The nineteenth chapter of the second book of Kings and the thirty seventh chapter of Isaiah are alike.

G. S.

---

[Explanation of a verse in Paradam requested.]

அரிகோவிந்த செயம்.

உண்மைப் பயன் விளக்குந் தாரகையோர்களே,

புலவர்வழியாய் உண்மைப் பயன்றரக்காதலுற்றனம். பாரதம் உத்தர காண்டம் கும். போர்ச் சருக்கம் முதற் கவி:

போரறு மூழ்கி மறைநூல் பிதற்றிமிடறும் பிளந்துபிறவித்—
தாரறமாறுதினை யாமதுங்கடொழ்வே புரிந்தசுரர்—ஓரறபே
தசமயங்களுக்கு முதலாகிநின்ற யொருவன் இராம நாமமுறை
செய்துமன்கோடிவோர்கள் காணுமிமையோர்.

இலங்கைத்தீவு வடமிருச்சி பருத்தித்துறை
சிதேவி நாமகவாமி.

---

(Explanation of a verse in Agastyer Gnanam requested.)

உதயதாரகையின் முகாமைக்காரருக்கு வந்தனம்.

அகத்தியர் ஞானம் உகம். பாட்டு.

வணங்குவாய்சகசோதியொருவனுமே மாநிலத்தை யொருகொடியில் வகுத்தே மண்ணிற்
குணமான மனிதரையும் படைத்த பின்பு குவலயத்திற்குறுதி
த்துக்குருவாய் வந்து
சனமான சமுசாரமொன்றில்லாமற் சன்னுபோலிருந்துதவத்தைக் காட்டி
அன்பானசித்தர்களையிருத்திப்போட்டு அகண்டதலஞ்சென்ற வரையன்றுவரயே.

இப்பாட்டின் கருத்தை அறிய விரும்பிக் கற்றவர்களுக்கபேக்ஷிக்கிறேன். இப்படிக்கு

வட்டுகோட்டை துஅாசஉம். } வேலாயுதர்
ஞு. மார்கழி மீ. லதி. } முதலித்தம்பி.

*To the Editors of the Morning Star.*

GENTLEMEN,

In answer to the question proposed by Mr J. W. of the Seminary in the last No. of the "Star" I beg to extract from an eminent author the following statement on the disadvantages of the use of tobacco Chewing or snuffing is in the highest degree injurious to health It is a poison, and by its action upon the nerves and stomach it destroys the appetite, prevents the perfect concoction of the food creates an unnatural thirst, and renders the individual who uses it, nervous and otherwise diseased. Besides it destroys the sense of smell and causes a very disagreeable alteration in the tone of the voice And also, from the great thirst and alteration in the sense of taste, occasioned by the use of tobacco, an avidity for inebriating liquors is very liable to be contracted; but on the whole, from the *habitual use* of tobacco, in either of its forms of snuff, cud, or cigar, the following symptoms may arise; a sense of *weakness; sinking or pain* at the pit of the *stomach; dizziness* or *pain* in the head; occasional *dimness* or temporary *loss of sight; paleness* and *sallowness* of the *countenance;* and sometimes *swelling* of the *feet;* an *enfeebled state* of the *voluntary muscles*, manifesting itself sometimes by *tremors of the hands*, sometimes by *weakness, tremulousness, squeaking*, or *hoarseness*, disturbed *sleep*, starting from the early slumbers with a sense of suffocation, or the feeling of *alarm; incubus*, or *nightmare; epileptic* or *convulsion fits; confusion* or *weakness* of the *mental faculties; peevishness* and *irritability* of *temper; instability* of *purpose;* seasons of great *depression* of the *spirits;* long *fits* of unbroken *melancholy* and *despondency*, and in some cases, *entire* and *permanent mental derangement*.

In opposition to the foregoing list of evils it is thought by some that there are some advantages to the system from the use of tobacco to counterbalance in some degree its injurious effects, but there are none not even the least, and its use is to be attributed entirely to a depraved appetite

By the above reasons it appears evident that there is *no advantage* whatever in *smoking chewing* or snuffing this powerful narcotic.

Yours &c.
S TAMPIAHPULLAY.

## புதினச்சங்கதிகள்.

### யாழ்ப்பாணம்.

*சுப்பிரீங்கோடு.*—தை மீ. உஅ தி. அளவிற் சலாபத்திலும், மாசி மீ. ச தி. அரிப்பிலும், ௰ தி. யாழ்ப்பாணத்திலுஞ் சுப்பிரீங்கோடு கூடப்படுமென்று கேள்விப்படுகிறோம.

மேலான வெஸ்லியான் மிசியோனைச் சேர்ந்த தர்மசாலைகளுக்குள்ளே சிரேஷ்டராகிய மகா கனம்பொருந்திய பார்சிவலையரானவர், பட்டினத்திலும் வண்ணார்பண்ணையிலும் தாம் ஸ்தாபித்த தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே கற்கும் பிள்ளைகளை மேற்படி வண்ணார்பண்ணையிற் செட்டித் தெருவிற் பள்ளிக்கூடத்திலே போன மார்கழி மீ. உக. ந் தேதி வெள்ளிக்கிழமையிலன்று அவர்கள் கற்றிருக்கும் வேதப்பொழிப்பு, புதியேற்பாடு, சூடாமணி நிகண்டு, இலக்கணச்சுருக்க வினாவிடை, திருவள்ளுவர் குறள் முதலிய கல்விகளிற் பரிசோதித்து அவர்களிற் பன்னிருவர்கள் கல்வித் திறத்தில் மற்றவர்களிலும் அதிகமாயிருந்ததைக் கண்டு மனமகிழ்ச்சி அடைந்து அவர்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வஸ்திரம் பரிசாகக் கொடுத்தார். இவ்வனர் தங்கள் தேசத்தை விட்டு இத்தேசத்திற் சஞ்சரித்துத் தங்கள் செல்வத்தையும் நேரத்தையுஞ் செலவழித்து எங்கள் பிள்ளைகளுக்கு ஒரு பொழுதும் அழியாமல வளர்ந்தோங்குமதிவைத்தருங் கல்வியைக் கற்பித்துச் சாவஞ்ஞத்துவமுள்ள கடவுளுக்கு அவரால் சிருட்டிக்கப்பட்ட பல உயிர்வர்க்கங்களுக்குஞ் சிறந்த மனிதர்களுக்கு முன்னே தருமசாலைகளா விளங்குமென்ற இவ்வையர் முதலியமிசியனேரிமார்களுக்கு வந்தனஞ் சொல்லுகின்றனம்.

இப்படிக்கு
ஓர் தமிழன்.

### குடிவெறியனுக்குச் சம்பவித்த நஷ்டம்.

ஒரு குடியன் தானுந் தன் பெண்சாதியும் படுத்துக்கொண்டு நித்திரைபண்ணுகையில் அத்தராத்திரியிலே எழுந்து பெண்சாதி தூங்கப் பார்த்து அவள் கழுத்திலிருந்த தாலியைக் கொத்தோடே அறுத்துக்கொண்டு தெருக் கதவைப் பின்னாலே சாத்திக்கொண்டு திருட்டுச் சாராயம் விற்கிற இடத்துக்கு வருகையில் வழியிலே ரோந்துகாரரைக் கண்டு ஒரு திண்ணையின்கீழ்ப் பதுங்கியிருந்தான். ரோந்துக்காரர் மறைந்த பின்பு அந்தத் திண்ணையின் மேலே படுத்திருந்த ஒருவன் விழித்துக் கீழே பதுங்கியிருந்த குடியன் கையில் தாலிகொத்தோடே மின்னுகிறதை ஊன்றிப் பார்த்துத் திடீரென்று கீழே குதித்துத் தாலியைப் பருந்துபோற் பிடுங்கிக்கொண்டு ஓட்டம்பிடித்தான். குடியன் அவனைத் தொடர்ந்து சில தூரம் ஓடியும் அவனைப் பிடிக்கமாட்டாமல் அலுத்துப்போய்(ச) மணிக்குத் தன் வீட்டுக்குத் திரும்பி வந்து தெருக் கதவு விரியத் திறந்திருப்பதைப் பார்த்து மனக்கலக்கத்தோடே வீட்டுக்குள்ளே நுழைந்து பார்க்கையில, வீட்டிலுள்ளவர்கள் அக்கம் தெரியாது நித்திரைபண்ணுவதையுங் கொடிமேலிருந்த துணிகளும், ஒரு கைப்பெட்டியும, ஒரு செம்பும, இரண்டு கிண்ணிகளுங் களவுபோயிருப்பதையும பார்த்துக் கதவைத் திறந்து வைத்ததால இதுவும் தன்னால வந்த நட்டமென்று நினைத்து அவனுடைய மனச்சாட்சி அவன் குற்றத்தை வெளிப்படுத்தினது போலத் தான செய்த குற்றத்தைப் பெண்சாதி பிள்ளைகளுக்கு வெளிப்படுத்தி விசனப்பட்டழுதானென்று நாங்கள் கேள்விப்பட்டு இவ்விதமாக நம்முடைய தேசத்திற் குடிவெறியாற் கெட்ட குடும்பங்களைப் பார்த்து விசனப்படுகிறோம.

### பெருங்கள்ளரின் களவு—GANG ROBBERY.

திண்டிக்கல் தாலுகாவின் முனிஷியாயிருக்கிறவரின் வீட்டிலே சில நாளைக்கு முன்னே தாகோயித்தர் என்னுங் கள்ளர் புகுந்து அம்முனிஷியுடைய சனங்களிலுஞ் சிலரைக் காயப்படுத்திப் பதினாயிரம (௰௲) ரூபாவுக்கு விலைபெறும் அநேக விலையுயர்ந்த உடைமைகளையுங் கொள்ளையடித்துக்கொண்டு போய்விட்டாரகளென்று கேள்வியாகிறோம் (அ ந: ஜநயம். உஉ௱. பத்திரிகை.)

## SUMMARY OF NEWS.

### JAFFNA.

*Supreme Court.*—The sessions of the Supreme Court for the 1st Northern Circuit of 1843, are to be held

at Chilaw, on or about the 28th January.
Aripoe " 4th February.
Jaffna " 10th "

*Died at Manaar on the 7th January* 1843.—Anna Johana Helena, wife of Mr. John Fredrick Honter, *Post Office Clerk* at that place, leaving behind a disconsolate husband, an infant, and a circle of Relations and Friends to bemoan her irreparable loss.—*Communicated.*

*Overland Packets.*—The Jaffna Packets for the Overland Mail are notified to close on the 16th and 19th instant at 4 P. M.

The Express Packet to close on the 21st instant at 5 P. M.

*Exports and imports of Ceylon.*—A late Government Gazette published a Return of the Exports and Imports of the island for the last five years. The imports of *arms and ammunition* show the extraordinary increase of from £ 800 to £ 6000 per annum.—*Cotton goods* of *British* manufacture have increased from £ 48,400 to £ 89,500 per annum.—The aggregate of the *Imports* are for 1838, £547,500, for 1842, £794,700, being an increase of 50 per cent on the import trade of the island in 5 years.

In *Exports*, Coffee shews the large increase, from £ 116,000 in 1838, to £270,000 in 1842.—The aggregate of exports is for 1838, £892,300—for 1842, £463,400 being an increase of about 60 per cent.

*Registration of Slaves*—By the Government Ordinance No. 7, of 1842, it is enacted "that every proprietor or person in charge of a slave registered under the provisions of the Regulation No. 9. of 1818, or of any subsequent enactment relative to slavery in the maratime provinces,—"who may wish to retain such slave, shall, *on or before the first day of January 1843*," "appear before the District Court in which such slave was last registered," "and shall there apply for a renewal of such registry"—in

Digitized by Google

failure of which "the slave in respect of which such omission shall have been made, shall be, and is hereby declared to be absolutely free."

We are happy to learn that there have been few, if any applications, at the District Courts in this Province for the renewal of the registry of slaves, and consequently those formerly held in bondage are now free. The neglect of proprietors to attend to the registration of their slaves shews that they have little or no desire for the continuance of slavery.

### AFHANISTAN.

The following extract is from the Calcutta Englishman of the 17th December.

Mahomed Meerza Khan, the rival of the Persian chief and friend of the Barakzaees has gained possession of Bamian, where he is collecting men and grain to support Mahomed Akbar Khan, who is said to have reached within the distance of 20 coss of that place He will stop here for a few days to find how the people of Cabul are disposed towards him.

### CHINA.

Diplomatic matters are progressing as satisfactorily as could be desired. The whole of the first instalment of six millions had been paid. His excellency the plenipotentiary had visited *Shanghai*; his reception there, and the manifest satisfaction that was diffused among the merchants of that important emporium, at the prospect of commercial intercourse with the English, was especially gratifying, and leads to the belief that a vast amount of foreign business will be transacted at that consular port.

A proclamation has been issued by the plenipotentiary prohibiting British subjects from visiting for commercial purposes the northern ports till the scale of duties and tariff has been adjusted. The Chinese manifest the most amicable feeling towards the British.

*Prize for the best Essay in refutation of Hinduism.*—This prize of £200 proposed in 1840 by some unknown benefactor through the Bishop of Calcutta has been decided in favor of the Rev. J. B. Morris of Exeter.

### Rates of Toll chargeable at the different Toll Stations in Jaffna.

| | *Toll for the Ferries.* £ | s. | d. | *Toll for the Roads.* £ | s. | d. |
|---|---|---|---|---|---|---|
| 1. Every passenger carrying not more than fifteen pounds children under twelve years excepted | 0 | 0 | ½ | 0 | 0 | ¼ |
| 2. Every passenger carrying more than fifteen pounds. | 0 | 0 | ¾ | 0 | 0 | ⅜ |
| 3. Every vehicle for passengers, drawn by one horse, pony or mule, driver and passengers inclusive. | 0 | 1 | 0 | 0 | 0 | 6 |
| 4. Every vehicle for passengers, drawn by two horses, ponies, or mules, driver and passengers inclusive. | 0 | 1 | 6 | 0 | 0 | 9 |
| 5. Every additional horse, pony or mule, belonging to any of the above vehicles. | 0 | 0 | 3 | 0 | 0 | 1½ |
| 6. Every vehicle for passengers, drawn by one bullock. | 0 | 0 | 9 | 0 | 0 | 4½ |
| 7. Every additional bullock belonging thereto. | 0 | 0 | 1½ | 0 | 0 | ¾ |
| 8. Every horse and keeper, with or without rider, loaded or unloaded. | 0 | 0 | 4 | 0 | 0 | 2 |
| 9. Every other loaded beast of burden (elephant excepted) with its driver or keeper. | 0 | 0 | 2 | 0 | 0 | 1 |
| 10. Every other unloaded beast of burden (elephant excepted) with its driver or keeper. | 0 | 0 | 1 | 0 | 0 | ½ |
| 11. Every loaded cart drawn by one horse, bullock, buffaloe, or any other beast of burden (elephant excepted) driver inclusive. | 0 | 0 | 6 | 0 | 0 | 3 |
| 12. Every loaded cart drawn by two horses, bullocks, buffaloes, or any other beast of burden (elephant excepted) driver inclusive. | 0 | 0 | 9 | 0 | 0 | 4½ |
| 13. Every loaded cart drawn by three horses, bullocks, buffaloes, or any other beast of burden, (elephant excepted) driver inclusive | 0 | 1 | 0 | 0 | 0 | 6 |
| 14. Every additional horse, bullock, buffaloe, or other beast of burden (elephant excepted) belonging thereto. | 0 | 0 | 3 | 0 | 0 | 1½ |
| 15. Every unloaded cart drawn by one horse, bullock, buffaloe, or any other beast of burden (elephant excepted) driver inclusive. | 0 | 0 | 3 | 0 | 0 | 1½ |
| 16. Every unloaded cart drawn by two bullocks, buffaloes, or any other beast of burden (elephant excepted) driver inclusive. | 0 | 0 | 4½ | 0 | 0 | 2¼ |
| 17. Every additional horse, bullock, buffaloe or other beast of burden (elephant excepted) belonging thereto. | 0 | 0 | 1½ | 0 | 0 | ¾ |
| 18. Every loaded elephant waggon drawn by two elephants, with their drivers and leaf cutters included. | 0 | 2 | 0 | 0 | 1 | 0 |
| 19. Every unloaded elephant waggon drawn by two elephants, with their drivers and leaf cutters included. | 0 | 1 | 0 | 0 | 0 | 6 |
| 20. Every loaded elephant cart drawn by one elephant, with its driver and leaf cutters included. | 0 | 1 | 6 | 0 | 0 | 9 |
| 21. Every unloaded elephant cart drawn by one elephant, with its driver and leaf cutters included. | 0 | 0 | 9 | 0 | 0 | 4½ |
| 22. Every loaded elephant with its driver and leaf cutters. | 0 | 0 | 9 | 0 | 0 | 4½ |
| 23. Every unloaded elephant with its driver and leaf cutters. | 0 | 0 | 6 | 0 | 0 | 3 |
| 24. Every palenqueen with four bearers. | 0 | 0 | 6 | 0 | 0 | 3 |
| 25. Every additional bearer. | 0 | 0 | ½ | 0 | 0 | ¼ |
| 26 Every animal (dog excepted) not enumerated herein. | 0 | 0 | ⅛ | | 0 | 1-16 |
| 27. Every leaguer or cask not empty and not carried in a cart. | 0 | 0 | 2 | 0 | 0 | 1 |
| 28. Every leaguer or cask empty. | 0 | 0 | 1 | 0 | 0 | ½ |
| 29. All goods not carried in a vehicle or by men per load. | 0 | 0 | 2 | 0 | 0 | 1 |
| 30. Every vehicle not enumerated above. | 0 | 0 | 3 | 0 | 0 | 1½ |
| 31. Every log of wood, piece of stone, or other heavy article not being carried in a vehicle or by men. | 0 | 1 | 6 | 0 | 0 | 9 |

#### Ferry and Road Toll Stations.

1. Pannetorre Ferry.
2. Araly Ferry.
* 3. Kolombogam and Kalmonai Ferry, and at a branch station on the road between Kolombogam and Jaffna.
4. On the Road from Jaffna to Point Pedro.
5. On the Road from Jaffna to Chavagacherry.
6. On the Road from Jaffna to Mallagam.
7. On the Road from Jaffna to Sanguney.

* The Road Toll is payable for every person. &c. embarked at Colombogam, no matter for what place. The ferry Toll is only payable for persons, &c. crossed from Colombogam to Kalmonai and vice versa in the Renter's boats.

## NOTICE.

Notice is hereby given that Mr. Philippulle Bastiampulle of Jaffna intends to make application to the Honourable the Supreme Court, to be appointed a Proctor of the District Court of the Islands.

15th Dec. 1842. P. Bastiampulle.

### CONTENTS.—அட்டவணை.


| | pages. | | |
|---|---|---|---|
| Life of Beschi | 1 | வீரமாமுனிவர் சரித்திரவரலாறு | 1 |
| Selections from the Korans | 2 | மகம்மதுமதாநுசாரிகள் | 2 |
| Good's Book of Nature | 3 | கூட்டெம்பவர் செய்த பிரபஞ்சநூல் | 3 |
| Abbott's Lessons on Morals | 4 | நன்மார்க்கநெறி | 4 |
| Mr. Poor's Letters | 5 | | |
| Principels of English Grammar | 6 | விலியம லெனிஸ் என்றதுரை இங்கிலீசிற் செய்த இலக்கணச்சாரம் | 6 |
| The Ostrich | ib. | | |
| Rules for Christian Conduct | 7 | | |
| Scriptural Proof | ib. | | |
| Pancha-Tantra-Katei | 8 | பஞ்சதந்திரக்கதை | 8 |
| Cural-Panchangam | ib. | குறள்—பஞ்சாங்கம் | ib. |
| On English Grammar | 9 | இலக்கணத்தைப் பற்றி | 9 |
| Explanation of a verse requested | 10 | | |
| An Arithmetical Query | ib. | | |
| Summary of News | 11 | புதினச் சங்கதிகள் | 11 |


Printed and Published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor.

Digitized by Google